ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2025

විෂය අංකය / பாட இலக்கம் **21** විෂයය / பாடம் **ECONOMICS**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 1 | 31. | 4 | 41. | 4 |
| 02. | 5 | 12. | 2 | 22. | 2 | 32. | 2 | 42. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 4 | 33. | 2 | 43. | 4 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 1 | 34. | 3 | 44. | 3 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 1 | 35. | 2 | 45. | 4 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 3 | 36. | 1 | 46. | 4 |
| 07. | 1 | 17. | 3 | 27. | 5 | 37. | 2 | 47. | 2 |
| 08. | 3 | 18. | 5 | 28. | 4 | 38. | 5 | 48. | 1 |
| 09. | 5 | 19. | 2 | 29. | 2 | 39. | 5 | 49. | 2 |
| 10. | 1 | 20. | 3 | 30. | 4 | 40. | 2 | 50. | 1 |

❂ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 01 × 50 = 50



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

உப பகுதி 'அ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) சொத்து வளங்களையும் மனித வளங்களையும் வரைவிலக்கணப்படுத்தி அவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(ii) அருமைத்தன்மை காரணமாக அமையச் செலவு தோன்றுவது எவ்வாறு? தனி நபர்களும் அரசாங்கங்களும் எதிர்கொள்ளும் அமையச் செலவுகளுக்கு உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(iii) நவீன உற்பத்தி முறைமைகளுள் விளைதிறனை மேம்படுத்துவதற்காக தொழிற்பிரிப்பு எவ்வாறு பங்களிக்கிறது என்பதை சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iv) பொருளாதார சுதந்திரமும் நுகர்வோர் இறைமையும் சந்தைப் பொருளாதார முறைமைகள் மற்றும் கட்டளைப் பொருளாதார முறைமைகள் ஆகியவற்றிற்கிடையில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) ஒரு சந்தைப் பொருளாதார முறைமையில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் விலைப்பொறிமுறையின் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

1. (i)

- சொத்து வளங்கள் என்பவை பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் தொட்டுணரக்கூடிய மற்றும் தொட்டுணரமுடியாத மனிதரல்லாத சொத்துக்களாகும். → வரைவிலக்கணம் 01 → உ.தா 01

(01 புள்ளி)

- உதாரணம்: நிலம், மூலதனம், இயற்கை வளங்கள், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்.

(இது போன்ற ஏதேனும் உதாரணத்திற்கு 01 புள்ளி )

- மனித வளங்கள் என்பவை பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் மனிதர்களின் உடல் மற்றும் மனரீதியான (உளs) உழைப்புகளை குறிக்கின்றது. (01 புள்ளி)
- உதாரணம்: ஒரு ஆசிரியர், ஒரு தொழிற்சாலை தொழிலாளர், ஒரு முகாமையாளர் மற்றும் ஒரு மருத்துவர். , தொழிலாளர் + உழைப்பு

(இது போன்ற ஏதேனும் உதாரணத்திற்கு 01 புள்ளி )

→ வரைவிலக்கணம் 01 உ.தா 01

**(மொத்தப் புள்ளிகள் 04)**

(ii)

- அருமை என்பது நேரம், பணம், தொழிலாளர், நிலம் போன்ற வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக இருக்கையில் மனித தேவைகள் வரையறுக்கப்படாதவையாக உள்ளன என்பதைக் குறிக்கிறது. அருமை காரணமாக, தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்தையும் உற்பத்தி செய்யவோ நுகரவோ முடியாது. எனவே, அவர்கள் தெரிவுகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். **(1 புள்ளி)**

→ (அருமை → தெரிவு)

- ஒரு தெரிவு மேற்கொள்ளப்படும் போது அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவு தியாகம் செய்யப்படுவதே அமையச் செலவு எனப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், ஒரு தீர்மானம் எடுக்கப்படும் போது தியாகம் செய்யப்படும் அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதியே அமையச் செலவு ஆகும்.

**(01 புள்ளி)**

- தனிநபர்களுக்கான அமையச் செலவு: தனிநபர்கள் வருமானம் மற்றும் நேரம் தொடர்பில் அருமையை எதிர்கொள்கின்றார்கள். இதனால் அவர்கள் மாற்றுகளுக்கு இடையில் தேரிவு செய்ய வேண்டும்.

  ✓ ஒரு மாணவர் ஒரு மணி நேரத்தை பொருளியல் படிப்பதற்கு செலவிட்டால், அதன் அமையச் செலவு அவர் தியாகம் செய்யும் ஒரு மணி நேர ஓய்வு அல்லது பொழுதுபோக்காக இருக்கலாம்.

  ✓ ஒருவரால் ரூ. 50,000 செலவில் ஒரு புதிய ஸ்மார்ட்போன் வாங்கப்பட்டால், அதன் அமையச் செலவு ஒரு குறுகிய விடுமுறை அல்லது அந்தப் பணத்தை கல்விக்காக சேமிப்பதாக இருக்கலாம்.

**(இது போன்ற ஏதேனும் உதாரணத்திற்கு 01 புள்ளி )**

- அரசாங்கங்களுக்கான அமையச் செலவு: அரசாங்கங்களும் நிதி மற்றும் மெய் வளங்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் காரணத்தால், செலவுகளை முன்னுரிமைப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.
  ✓ அரசாங்கம் அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதில் அதிகமாக செலவிட முடிவு செய்தால், அதன் அமையச் செலவு சுகாதாரம் அல்லது கல்விக்கான செலவுகளை குறைப்பதாக இருக்கலாம்.
  ✓ ஒரு நாடு நிலத்தை பயன்படுத்தி கிரிக்கெட் மைதானம் கட்டுகிறதெனில், அதே நிலத்தை தொழிற்சாலைகள் கட்ட பயன்படுத்த முடியாது — இழக்கப்படும் கைத்தொழில்துறை உற்பத்திதான் அதன் அமையச் செலவாகும்.

**(இது போன்ற ஏதேனும் உதாரணத்திற்கு 01 புள்ளி )**
**(மொத்த புள்ளிகள் 04)**

(iii)

✓ சிறப்புத் தேர்ச்சி: தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட பணியை மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் அந்தப் பணியில் உயர்ந்த நுட்பத்தேர்ச்சியினையும் மற்றும் வினைத்திறனையும் பெறுகின்றனர். இது நேரத்தையும் தவறுகளையும் குறைத்து, ஒரு தொழிலாளருக்கான வெளியீட்டினை அதிகரிக்கிறது.

✓ நேரம் சேமிப்பு: தொழிலாளர்கள் வேறுபட்ட பணிகளை மாற்ற வேண்டிய அவசியம் இல்லாததால் நேரம் சேமிக்கப்படுகிறது. ஒரு செயன்முறையிலிருந்து மற்றொன்றிற்குச் செல்லுதல் அல்லது கருவிகளை அடிக்கடி மாற்றுதல் போன்ற செயல்களில் நேரம் வீணாகாது.

✓ இயந்திரங்களின் பயன்பாடு: தொழில் பிரிப்பு உற்பத்தியில் இயந்திரங்களின் அறிமுகப்படுத்தலையும் பயன்படுத்தலையும் எளிதாக்குகிறது. சிறப்பு நிபுணத்துவமான இயந்திரங்கள் உற்பத்தி வேகத்தையும் அளவையும் அதிகரிக்கின்றன.

✓ அதிக வெளியீடு மற்றும் குறைந்த செலவு: சிறப்பு நிபுணத்துவம் பெற்ற தொழிலாளர்கள் + இயந்திரங்கள் = ஒரு தொழிலாளருக்கு அதிக வெளியீடு. உற்பத்தித் திறன் அதிகரிக்கும் போது சராசரி உற்பத்திச்செலவு குறைகிறது.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- ✓ புத்தாக்கம்: ஒரே பணியை மீண்டும் மீண்டும் செய்வதால் தொழிலாளர்கள் மேம்பாடுகள் மற்றும் புத்தாக்கங்களைப் பரிந்துரைக்க முடியும். இது மொத்த உற்பத்தித் திறனை மேலும் உயர்த்த உதவுகிறது.

**(ஏதாவது மூன்று காரணங்களுக்கு தலா 01 புள்ளி; மொத்த புள்ளிகள் 03)**

**(சுருக்கமான விளக்கங்களில்லாமல் மூன்று காரணங்களை மட்டும் குறிப்பிடும் பதில்களுக்கு 01 புள்ளி வழங்கப்படும்)**

(iv)

- பொருளாதார சுதந்திரம்:
  - ✓ சந்தை பொருளாதாரத்தில் தனிநபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொருளாதார முடிவுகளை எடுப்பதற்கு உயர்ந்த அளவிலான சுதந்திரம் உள்ளது. ஆனால் கட்டளை பொருளாதாரத்தில், என்ன உற்பத்தி செய்ய வேண்டும், எங்கு வேலை செய்ய வேண்டும், எப்படி முதலீடு செய்ய வேண்டும் போன்ற விடயங்களில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மிகக் குறைந்த சுதந்திரம் காணப்படும்அல்லது எவ்வித சுதந்திரமும் இருக்காது.
  - சந்தை பொருளாதாரத்தில் மக்கள் தங்களது தொழில்களைத் தெரிவு செய்யவும், வியாபாரங்களைத் தொடங்கவும், விரும்பும் இடங்களில் முதலீடு செய்யவும் சுதந்திரம் பெற்றுள்ளனர். ஆனால் கட்டளை பொருளாதாரத்தில், பொருளாதார முடிவுகளை பெரும்பாலும் மத்திய அரசு தான் எடுக்கிறது.
  - சந்தை பொருளாதாரத்தில் உற்பத்தி மற்றும் விலையிடலில் அரசாங்கத்தின் தலையீடு மிகக் குறைவாக உள்ளது. ஆனால் கட்டளை பொருளாதாரத்தில், அரசாங்கம் விலை நிர்ணயம், உற்பத்தி இலக்குகள், மற்றும் வள ஒதுக்கீட்டை தீர்மானிக்கிறது.

**(ஏதேனும் இரண்டு வேறுபாடுகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 02 புள்ளிகள்)**

நுகர்வோர் இறைமை:

சந்தை பொருளாதாரத்தில், நுகர்வோருக்கு முழுமையான இறைமை உள்ளது — உற்பத்தியாளர்கள் நுகர்வோர் தேவைகளுக்கு ஏற்ப செயற்படுகின்றார்கள். ஆனால் கட்டளை பொருளாதாரத்தில், நுகர்வோர் இறைமை மிகவும் பலவீனமாகவோ அல்லது முற்றிலும் இல்லாமலோ இருக்கும்.

சந்தை பொருளாதாரத்தில், அதிக தேவையுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் கட்டளை பொருளாதாரத்தில், நுகர்வோர் அரசாங்கம் வழங்குவதை மட்டுமே பெறுகின்றனர்; இதனால் அடிக்கடி பற்றாக்குறை அல்லது மிகை ஏற்படலாம்.

சந்தை பொருளாதாரத்தில், நுகர்வோரின் தெரிவுகள் வள ஒதுக்கீடை வழிப்படுத்துகின்றன. ஆனால் கட்டளை பொருளாதாரத்தில், உற்பத்தியானது நுகர்வோர் விருப்பங்களை அடிப்படையாகக் கொள்ளாமல், அரசாங்கத்தின் திட்டமிடுதலின் அடிப்படையில் நடைபெறுகிறது.

(ஏதேனும் இரண்டு வேறுபாடுகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி; மொத்தம் 02 புள்ளிகள்)

**(மொத்தப்புள்ளிகள் 04)**

(v)

- ஒவ்வொரு பொருளாதாரமும் எதிர்கொள்ளும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்:
  எதை உற்பத்தி செய்வது? எவ்வாறு உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது?

  ✓ எதை உற்பத்தி செய்வது? பயனுறுதித்தன்மை :

  ✓ விலைப் பொறிமுறையானது நுகர்வோர் கேட்கும் பொருட்களை நோக்கி வளங்களை ஒதுக்குகிறது.

  ✓ உற்பத்தியாளர்கள் விலைச் சமிக்ஞைகளுக்கு ஏற்ப உற்பத்தி செய்கின்றார்கள் — உயர் விலைகள் அதிகமான கேள்வி மற்றும் இலாபத்தைக் குறிக்கின்றன.

**(01 புள்ளி)**

  ✓ எதை உற்பத்தி செய்வது? வரையறைகள்:
  ✓ இலாபகரமாக இல்லாததால், அத்தியாவசிய பொருட்கள் (உ.ம்., தெருவிளக்குகள் போன்ற பொது பொருட்கள் மற்றும் கல்வி, சுகாதாரம் போன்ற மேன்மைப் பொருட்கள்) உற்பத்தி செய்யப்படாமல் புறக்கணிக்கப்படலாம்.
  ✓ அதிக கேள்வியால், மதுபானம், சிகரெட் போன்ற தீமைதரும் பொருட்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படலாம். **(01 புள்ளி)**

  ✓ எவ்வாறு உற்பத்தி செய்வது? பயனுறுதித்தன்மை:
  ✓ நிறுவனங்கள் அதிக இலாபம் பெறுவதற்காக மிகக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யவதற்கு முயற்சிக்கின்றன.
  ✓ இது செயல்திறன் மிக்க உற்பத்தி முறைகள் உருவாவதற்கு வழிவகுப்பதுடன் புத்தாக்கம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கிறது

(01 புள்ளி)

  ✓ எப்படி உற்பத்தி செய்வது? வரையறைகள்:
  ✓ நிறுவனங்கள் தொழிலாளர் அதிகம் தேவைப்படும் முறைகளுக்கு பதிலாக மூலதன அதிகம் பயன்படுத்தப்படும் முறைகளைத் தேர்வு செய்தால் அது வேலையிழப்புக்குக் காரணமாகலாம்.
  ✓ நிறுவனங்கள் இலாபத்தை நோக்காகக் கொண்டு சமூகச் செலவுகளை (எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்) புறக்கணிப்பதனால், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

**(01 புள்ளி)**

  ✓ யாருக்காக உற்பத்தி செய்வது? பயனுறுதித்தன்மை:
  ✓ பொருட்கள் கொள்வனவுச் சக்தி அடிப்படையில் பொருட்களைச் செலுத்தும் திறன் உள்ளவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன .
  ✓ மக்கள் கொள்வனவு செய்யத் தயங்கும் அல்லது கொள்வனவு செய்ய முடியாத பொருட்களுக்கு வளங்கள் வீணாகப்படுவதில்லை.

**(01 புள்ளி)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- ✓ யாருக்காக உற்பத்தி செய்வது? வரையறைகள்:
- ✓ வறியவர்களின் அடிப்படை தேவைகள், அவர்களுக்கு கொள்வனவுச்சக்தி இல்லாததால், பூர்த்தி செய்யப்படாமல் போகலாம்.

**(01 புள்ளி)**
**(மொத்த புள்ளிகள் 05)**

(பயனுறுதித்தன்மை அல்லது வரையறைகள் மட்டும் குறிப்பிடப்பட்டால், அதிகபட்சம் 03 புள்ளிகள் மட்டுமே வழங்கப்படும்)

**2.** (i) நிரம்பல் வளையியின் ஒரு நகர்வுக்கு ஏதுவாகும் மூன்று காரணிகளைப் பட்டியல் படுத்துக. (03 புள்ளிகள்)

(ii) விலைக் கேள்வி நெகிழ்ச்சி என்பதனால் கருதப்படுவதென்ன? அது மொத்த வருவாயினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றம் சாதாரண மற்றும் இழிவுப் பொருள்களின் கேள்வியை எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) உற்பத்தியாளன் மிகையை வரைவிலக்கணப்படுத்தி அது ஒரு கேள்வி நிரம்பல் வரைபடத்தில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்பதைக் காட்டுக. (04 புள்ளிகள்)

(v) உற்பத்தித் தொழில்நுட்பத்தில் ஏற்படும் ஒரு மேம்பாடு சந்தைச் சமநிலையில் மாற்றங்கள் ஏற்படக் காரணமாவது எவ்வாறு? உமது விடைக்கு ஆதாரமாக வரைபடங்களைப் பயன்படுத்துக. (05 புள்ளிகள்)

2. (i)

- ✓ உற்பத்தி செலவில் ஏற்படும் மாற்றங்கள் (உள்ளீட்டு விலைகள்)
- ✓ தொழில்நுட்ப மேம்பாடுகள்
- ✓ அரசாங்க கொள்கைகள் (வரி மற்றும் மானியங்கள்)
- ✓ சந்தையில் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை
- ✓ எதிர்கால விலைகள் குறித்த எதிர்பார்ப்புகள்
- ✓ இயற்கை காரணிகள் (உ.ம்., விவசாயத்துறையில் காலநிலை நிலைமைகள்)

**(ஏதேனும் மூன்று காரணிகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி)**
**(மொத்த புள்ளிகள் 03)**

(ii)

✓ ஒரு பொருள் அல்லது சேவையின் விலை மாற்றங்களுக்கு ஏற்ப கேள்வித் தொகையின் பிரதிபலிப்பே விலைக்கேள்வி நெகிழ்ச்சியாகும். **(01 புள்ளி)**


- விலைக்கேள்வி நெகிழ்ச்சிக்கும் மொத்த வருமானத்திற்கும் இடையிலான தொடர்பு :

| நெகிழ்ச்சியின் வகை | நெகிழ்ச்சி பெறுமானம் | விலைமாற்றம் | மொத்த வருமானம் |
|---|---|---|---|
| நெகிழ்ச்சியுடையது | >1 | அதிகரிக்கின்றது | வீழ்ச்சியடைகின்றது |
| | | வீழ்ச்சியடைகின்றது | அதிகரிக்கின்றது |
| நெகிழ்ச்சியற்றது | <1 | அதிகரிக்கின்றது | அதிகரிக்கின்றது |
| | | வீழ்ச்சியடைகின்றது | வீழ்ச்சியடைகின்றது |
| அலகு நெகிழ்ச்சி | =1 | அதிகரிக்கின்றது | மாற்றமில்லை |
| | | வீழ்ச்சியடைகின்றது | மாற்றமில்லை |
| பூரணமான நெகிழ்ச்சியுடையது | ∞ | அதிகரிக்கின்றது | பூஜ்ஜியமாக வீழ்ச்சியடைகின்றது |
| | | வீழ்ச்சியடைகின்றது | வெகுவாக அதிகரிக்கிறது |
| பூரண நெகிழ்ச்சியற்றது | 0 | அதிகரிக்கின்றது | அதிகரிக்கின்றது |
| | | வீழ்ச்சியடைகின்றது | வீழ்ச்சியடைகின்றது |

(ஏதேனும் மூன்று தொடர்புகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி; **மொத்த புள்ளிகள் 04)**

(iii)


✓ ஒரு சாதாரண பொருள் என்பது, வருமானம் அதிகரிக்கும் போது அதன் கேள்வியும் அதிகரிக்கும் பொருளாகும். நுகர்வோர் வருமானம் அதிகரிக்கும் போது, சாதாரண பொருட்களின் கேள்வி வளையி வலப்புறம் நகரும். மாறாக, வருமானம் குறையும் போது, கேள்வி வளையி இடப்புறம் நகரும்.






අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

✓ ஒரு இழிவுப் பொருள் என்பது வருமானம் அதிகரிக்கும் போது அதன் கேள்வி குறைவடையும் பொருளாகும். வருமானம் வீழ்ச்சியடையும் போது, இழிவுப் பொருட்களுக்கு எதிரான கேள்வி அதிகரிக்கும்.





(வருமான மாற்றத்தின் நான்கு நிலைமைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி; **மொத்த புள்ளிகள் 04.)**

(iv)

✓ ஒரு பொருளுக்கு உற்பத்தியாளர் உண்மையில் பெறும் விலைக்கும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் குறைந்தபட்ச விலைக்கிடையேயான வேறுபாடு உற்பத்தியாளர் மிகை ஆகும் (அதாவது, அவர்களின் உற்பத்தியின் எல்லைச்செலவு).

இது உற்பத்தியாளர்கள் சந்தை விலையில் விற்கும்போது, அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்தபட்ச விலைக்குப் பதிலாக பெறும் கூடுதல் நன்மை அல்லது இலாபத்தை பிரதிபலிக்கின்றது.

**(02 புள்ளிகள்)**





**(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)**
**(மொத்த புள்ளிகள் 04)**

(v)

- தொழில்நுட்ப முன்னேற்றங்கள் நிரம்பல் அதிகரிப்பதற்குக் காரணமாகும். இது சந்தையில் விலையை குறைத்து, வெளியீட்டினை அதிகரிக்கும்.
- மேம்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றம் உற்பத்திச் செலவுகளைக் குறைக்கின்றது.
- உற்பத்தியாளர்கள் ஒவ்வொரு விலை மட்டத்திலும் அதிகமாக நிரம்பல் செய்வதற்கு விருப்பமுடன் இருக்கின்றனர்.
- நிரம்பல் வளையி வலப்புறம் நகரும்.
- இது பழைய விலையில் மிகை நிரம்பலை ஏற்படுத்தி விலையினை வீழ்ச்சியடையச்செய்கின்றது.
- குறைந்த விலையில் அதிக தொகையுடன் கூடிய புதிய சமநிலை நிலைநாட்டப்படுகிறது.

(03 புள்ளிகள்)




(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)
(மொத்த புள்ளிகள் 05)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

3. (i) குறைந்தபட்ச விலை என்றால் என்ன? போட்டித்தன்மை வாய்ந்த ஒரு ஊழியச் சந்தையில் சமநிலைக் கூலிக்கு மேலாக குறைந்தபட்ச கூலியை விதிப்பதனால் ஏற்படும் விளைவுகளை ஒரு வரைபடத்தின் மூலம் காட்டுக. (04 புள்ளிகள்)

(ii) விவசாய விளைபொருள்களின் விலையுறுதிப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தின் பாதுகாப்பு கையிருப்புகளைப் பேணும் திட்டங்களின் பயனுறுதிப்பாட்டை மதிப்பிடுக. இத்தகைய திட்டங்கள் தோல்வியடைய ஏதுவாகும் காரணிகள் எவை? (04 புள்ளிகள்)

(iii) ஒரு விவசாய விளைபொருளின் சந்தைக் கேள்வி ($Q_D$) மற்றும் நிரம்பல் ($Q_S$) சமன்பாடுகள் பின்வருமாறு தரப்படுகின்றன. இச் சமன்பாடுகளில் P என்பது கிலோகிராம் ஒன்றின் விலையையும் Q என்பது தொகையை மெற்றிக் தொன்களிலும் காட்டுகின்றன.

$Q_D = 720 - 4P$ $\qquad\qquad$ $Q_S = -180 + 6P$

(அ) சந்தைச் சமநிலை விலையினையும் தொகையினையும் கணிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) விவசாயிகளுக்கு கிலோகிராம் ஒன்றிற்கு 100 ரூபா உத்தரவாத விலையுடன் அரசாங்கம் குறைநிலைக் கொடுப்பனவு திட்டம் ஒன்றை தற்போது அறிமுகப்படுத்துவதாகக் கொள்வோம். விலையுதவித் திட்டத்தின் பின்னர் சந்தையில் பொருள் விற்கப்படும் விலையினைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)


(இ) விலையுதவித் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவினை மதிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ஈ) விலையுதவித் திட்டத்திற்கு முன்னரும் பின்னரும் உற்பத்தியாளன் மிகையை ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

3. (i)

- குறைந்தபட்ச விலை என்பது ஒரு பொருள் அல்லது சேவைக்காக விதிக்கப்படக்கூடிய குறைந்தபட்ச சட்டபூர்வ விலை ஆகும். ஆகவே, குறைந்தபட்ச விலைக்குக் குறைவான விலையில் அந்த பொருள்/சேவையை பரிமாற்றம் செய்வது சட்டவிரோதமாகும். விற்பனையாளர்கள் (அல்லது ஊழியச் சந்தையாயின் தொழிலாளர்கள்) குறைந்தபட்ச வருமானம் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக குறைந்தபட்ச விலை சமநிலை விலைக்கு மேலாக நிர்ணயிக்கப்படுகிறது.

(01புள்ளி)




**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)**

சமநிலைக் கூலி (We): இக்கூலியில் தொழில் வழங்குநர்கள் கேட்கும் ஊழியத்தின் தொகைக்கு சமமாக தொழிலாளர்கள் வழங்கும் ஊழியத்தின் அளவு காணப்படும்.

குறைந்தபட்ச கூலி (Wm): இது சமநிலைக் கூலியை விட உயர்ந்ததாக சட்டரீதியாக நிர்ணயிக்கப்பட்ட கூலியாகும். Wm > We என்ற நிலையில், நிரம்பல் செய்யப்பட்ட ஊழியத்தின் அளவு (Qs) ஊழியத்தின் கேள்வி (Qd) அளவை விட அதிகமாக இருக்கும்.

- இது ஊழிய மிகை நிரம்பலை உருவாக்குகிறது; அதாவது, வேலையின்மை.
- வேலைவாய்ப்பு பெற்றுள்ள தொழிலாளர்கள் அதிக கூலி பெறுகிறார்கள், ஆனால் தொழில்வழங்குனர்கள் வேலைவாய்ப்பு அளவை குறைப்பதால் சில தொழிலாளர்களால் தொழில் பெற முடியவில்லை.

**(02 புள்ளிகள்)**
**(மொத்த புள்ளிகள் 04)**

(ii)

ஒரு பாதுகாப்புக் கையிருப்புத் திட்டம் என்பது விவசாயப் பொருளிட்களின் விலையை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் செயல்படுத்தும் கொள்கையாகும். நிரம்பல் அதிகமாக இருக்கும் போது அரசாங்கம் மேலதிக உற்பத்தியை வாங்கி கையிருப்பாக வைத்துக்கொள்கிறது; வழங்கல் குறைவாக இருக்கும் போது அந்த கையிருப்பை சந்தையில் விடுகிறது. இதன் நோக்கம் விலைத் தளம்பலைக் குறைத்து, உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் கடுமையான விலைத் தளம்பல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதாகும்.

**(வரைவிலக்கணத்திற்கு 01 புள்ளி)**

**அனுகூலங்கள்:**

விலை உறுதிப்பாடு

- விளைச்சல் கூடிய காலங்களில் விலைகள் கடுமையாக குறைவதைத் தடுக்கிறது; இதனால் விவசாயிகளின் வருமானம் பாதுகாக்கப்படுகிறது.
- பற்றாக்குறை காலங்களில் திடீர் விலை உயர்வுகளைத் தடுக்கிறது; இதனால் நுகர்வோர் பாதுகாக்கப்படுகிறார்கள்.

உற்பத்தியை ஊக்குவித்தல்

- குறைந்தபட்ச விலை உத்தரவாதம் இருக்கிறது என்பதை அறிந்தால், விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்ய முன்வருவார்கள்.

உணவு பாதுகாப்பு

- பாதுகாப்புக் கையிருப்புக்களைப் பராமரிப்பது, பற்றாக்குறை காலங்களில் அவசியமான பொருட்களின் கிடைப்பனவை உறுதி செய்ய உதவுகிறது.

சந்தை மீதான நம்பிக்கை

- விவசாய சந்தைகளில் காணப்படும் நிச்சயமற்றதன்மை மற்றும் ஊக நடத்தை ஆகியவற்றை குறைக்கிறது.

**(ஏதாவது அனுகூலத்திற்கு 01 புள்ளி )**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பிரதிகூலங்கள் / வரையறைகள்:

அரசாங்கத்திற்கு அதிகச் செலவு

- மிகை உற்பத்தியினைக் கொள்வனவு செய்வதற்கு சேமிப்பிட வசதிகள், கையிருப்பு பராமரிப்பு செலவுகள் மற்றும் நிதி வளங்கள் தேவைப்படும்.

கெடுதல் அபாயம்

- விரைவில் கெடும் பொருட்களின் தரம் குறையக்கூடும்; இதனால் வீண் விரயம் ஏற்படும்.

சந்தை சமிக்ஞைகள் திரிபுபடல்

- விலைகளை செயற்கையாக உறுதிப்படுத்துவது, சந்தைக் கேள்விக்கேற்ப உற்பத்தியை சீராக்கம் செய்யும் விவசாயிகளின் ஊக்கத்தை குறைக்கலாம்.

உத்தம கையிருப்பு மட்டத்தினை நிர்ணயிப்பதில் சிரமம்

- அதிக கையிருப்பு அரசாங்கத்திற்குக்கு கூடுதல் செலவுகளை ஏற்படுத்தும்; குறைவான கையிருப்பு விலைகளை செயற்றிறனான வகையில் உறுதிப்படுத்த முடியாது.

பணவீக்க இடரபாயம்

- அதிக விலைக்கு கையிருப்பை வெளியே விடுதல் அல்லது அதிக விலைக்கு அதிகப்படியான கையிருப்பை கொள்வனவு செய்தல் பொது விலை மட்டத்தை பாதிக்கக்கூடும்.

**(ஏதாவது பிரதிகூலத்திற்கு 01 புள்ளி)**

பாதுகாப்புக் கையிருப்புத் திட்டங்கள் தோல்வியடையும் சூழ்நிலைகள்:

**அதிகமாக தளம்பலடையும் நிரம்பல்**

- உற்பத்தியின் அளவு மிக அதிகமாகத் தளம்பலடைந்தால் (உ.ம்., வரட்சி அல்லது வெள்ளம் காரணமாக), பாதுகாப்புக் கையிருப்புக்கள் விலைகளை உறுதிப்படுத்தத் தேவையான அளவில் இருக்க முடியாது.

**அதிக களஞ்சியப்படுத்தல் செலவுகள்**

- விரைவில் கெடும் பொருட்கள் அல்லது போதிய களஞ்சிய வசதிகள் இல்லாமை, இத்திட்டத்தை பொருளாதார ரீதியாக நிலைத்திருக்க முடியாததாக மாற்றலாம்.

**குறைவான சந்தை எதிர்வுகூறல்**

- சந்தையின் கேள்வியைஅல்லது நிரம்பலை தவறாக கணிப்பது, அதிக கையிருப்பு அல்லது பற்றாக்குறை நிலையை உருவாக்கலாம்.

**அரசியல் தலையீடு**

- சந்தை உறுதிப்படுத்தலை விடவும் அரசியல் இலாபத்திற்காக அரசாங்கங்கள் கொள்வனவுகளைத் திரிபுபடுத்தக்கூடும்.

**(தோல்விக்குக்காரணமான ஏதாவது காரணிக்கு 01 புள்ளி)**
**(மொத்த புள்ளிகள் 04)**

(iii)

(அ)

- சமநிலையில்: $Q_D = Q_S$ ; $720-4P = -180+6P$
- $900 = 10P$ ; $P = 90$
- $Q_D = 720 - 4(90) = 720 - 360 = 360$ தொன்கள்

  - சமநிலை விலை: ரூபா 90/கிலோ கிராம் **(01 புள்ளி)**
  - சமநிலைத் தொகை: 360 தொன்கள் **(01 புள்ளி)**

(ஆ)

- புதிய சமநிலை விலை = Rs. 100
- $Q_S = -180 + 6(100) = 420$ தொன்கள்
- சந்தைச் சமநிலை $Q_D = Q_S = 420$ தொன்கள் **(01 புள்ளி)**
- $720 - 4P = 420$; $4P = 720 - 420$; $4P = 300$
- சந்தை விலை = $4P = 300$; P = Rs. 75 per kg **(02 புள்ளிகள்)**

(இ)

- ஒரு கிலோவிற்கு அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு
= $P_p - P_m = 100 - 75 =$ Rs. 25 per kg

**(01 புள்ளி)**

- சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் மொத்த தொகை Total quantity traded in the market = 420 tons = 420, 000 kg
- மொத்தச் செலவு = ரூபா. 25 x 420, 000 = ரூபா. 10, 500, 000
- ரூபா. 10.5 மில்லியன் **(02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(ஈ)

- திட்டத்திற்கு முன்னரான உற்பத்தியாளர் மிகை Producer surplus before the programme:
- உற்பத்தியாளருக்குக் கிடைத்த விலை = Rs. 90 per kg and விற்கப்பட்ட தொகை = 360 தொன்கள்
- உற்பத்தியாளர் நிரம்பல் செய்யத் தயாராக இருக்கும் ஆகக்குறைந்த விலை = Rs. 30 per kg
- உற்பத்தியாளர் மிகை = ½ (90 – 30) x 360 x 1000
- 1/2 (60 x 360) x 1000 = Rs. 10, 800, 000 = Rs. 10.8 மில்லியன் **(01 புள்ளி)**

திட்டத்திற்குப் பின்னரான உற்பத்தியாளர் மிகை Producer surplus after the programme:
- உற்பத்தியாளருக்குக் கிடைத்த விலை = Rs. 100 per kg and விற்கப்பட்ட தொகை = 420 தொன்கள்
- உற்பத்தியாளர் நிரம்பல் செய்யத் தயாராக இருக்கும் ஆகக்குறைந்த விலை = Rs. 30 per kg
- உற்பத்தியாளர் மிகை = ½ (100 – 30) x 420 x 1000
- 1/2 (70 x 420) x 1000 = Rs. 14, 700, 000 = Rs. 14.700,000 மில்லியன்

(01 புள்ளி)

-உற்பத்தியாளர் மிகை ரூபா 10,800,000 இலிருந்து ரூபா 14,700,000 ஆக அதிகரிக்கின்றது.


-ரூபா 3.900,000 அதிகரித்துள்ளது. **(02 புள்ளிகள்)**

4. (i) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டை வரைவிலக்கணம் செய்து, அது நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டிலிருந்து வேறுபடும் விதத்தை விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டின் மூலம் ஒரு நிறுவனத்தின் சராசரி மாறும் செலவு (AVC) மற்றும் எல்லைச் செலவு (MC) வளையிகளின் வடிவம் மற்றும் நடத்தை என்பன எவ்வாறு விளக்கப்படுகின்றன? (04 புள்ளிகள்)

(iii) நிறுவனத்தின் செலவுக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக சாதாரண இலாபம் உள்ளடக்கப்படுவதை நீர் எவ்வாறு நியாயப்படுத்துவீர்? (04 புள்ளிகள்)

(iv) பின்வரும் வரைபடம் ஒரு நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்கால செலவுக் கட்டமைப்பையும் சந்தையில் நிலவக்கூடிய சாத்தியமான விலைகளையும் காட்டுகிறது.




சந்தை விலை ஒரு கிலோகிராமிற்கு ரூபா 45 ஆயின்,

(அ) பொருளியல் இலாபத்தை அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனத்தின் மொத்த நிலையான செலவைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) தனியுரிமைப் போட்டியை வரைவிலக்கணப்படுத்தி அது நிறைபோட்டியிலிருந்தும் தனியுரிமையிலிருந்தும் வேறுபடும் விதத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

4. (i)

✓ குறுங் கால உற்பத்தி தொழிற்பாடு என்பது உற்பத்தி செய்யப்படும் வெளியீட்டு அளவு மற்றும் பயன்படுத்தப்படும் மாறும் உள்ளீட்டு அளவு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை காட்டுகிறது. இதில் குறைந்தபட்சம் ஒரு உள்ளீடு (மூலதனம் அல்லது நிலம் போன்றவை) நிலையானதாக இருக்கும் **(01 புள்ளி)**

✓ குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு என்பது, குறைந்தது ஒரு உள்ளீடு (உ-ம்., மூலதனம்) நிலையானதாக இருக்கும் போது, வெளியீடு மற்றும் மாறும் உள்ளீடுகள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுகிறது. நீண்டகால உற்பத்தி தொழிற்பாடு என்பது, அனைத்து உள்ளீடுகளும் மாறக்கூடியவையாக இருக்கும் போது, வெளியீடு மற்றும் உள்ளீடுகளுக்கிடையிலான தொடர்பைக் காட்டுகிறது.

✓ குறுங்கால உற்பத்தி தொழிற்பாட்டில், நிறுவனங்கள் அனைத்து உற்பத்தி காரணிகளையும் மாற்ற முடியாது. நீண்டகால உற்பத்தி செயல்பாட்டில், தொழிற்சாலையின் பருமன் மற்றும் தொழில்நுட்பம் உட்பட அனைத்து உற்பத்தி காரணிகளையும் மாற்ற முடியும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

✓ • குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு குறைந்து செல்லும் எல்லை விளைவு விதிக்கு உட்பட்டது. நீண்டகால உற்பத்தி தொழிற்பாடு அளவுத்திட்ட விளைவு விதிக்கு (அதிகரிக்கும், நிலையான, அல்லது குறையும் ) உட்பட்டது.

**(இரண்டு வேறுபாடுகள் பற்றிய ஏதாவது இரண்டு விளக்கங்களுக்கு தலா 01 புள்ளி**
**(மொத்த புள்ளிகள் 03)**

(ii)

- குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு என்பது ஒரு நிறுவனத்தின் சராசரி மாறும் செலவு மற்றும் எல்லை செலவு செலவு வளைவுகளின் வடிவம் மற்றும் நடத்தையை நேரடியாக நிர்ணயிக்கிறது. இந்த தொடர்பு உருவாகுவதன் காரணம், உற்பத்தி மற்றும் செலவு ஆகியவை ஒரே செயல்முறையின் இரண்டு பக்கங்கள் என்பதாகும் — உற்பத்தி என்பது உள்ளீடுகள் எவ்வாறு வெளியீடாக உருவாக்குகின்றன என்பதைக் காட்டுகிறது; செலவு என்பது அந்த உள்ளீடுகளுக்கான செலவினத்தை காட்டுகிறது.
**(01 புள்ளி)**

- எல்லை செலவு வளையியின் வடிவமானது எல்லை உற்பத்தி வளையியின் பிரதிபலிப்பாக உள்ளது. எல்லை செலவு என்பது மாறும் உள்ளீட்டின் (உதாரணமாக ஊழியம்) எல்லை உற்பத்தியைப் பொறுத்தது.எல்லை உற்பத்தி அதிகமாக இருக்கும் போது, எல்லை செலவு குறைவாக இருக்கும்.குறைந்து செல்லும் விளைவு விதி காரணமாக எல்லை உற்பத்தி குறையும்போது, எல்லை செலவு அதிகரிக்கும்.ஒவ்வொரு மேலதிக ஊழியரும் குறைவாக உற்பத்திக்குப் பங்களித்ததால், மேலதிக அலகுகள் தயாரிக்க அதிக செலவு ஏற்படும்; எனவே எல்லை செலவு அதிகரிக்கின்றது.
**(01 புள்ளி)**

- சராசரி மாறும் செலவு என்பது ஒவ்வொரு உற்பத்தி அலகிற்கும் ஏற்படும் மாறும் செலவு ஆகும். சராசரி மாறும் செலவு U-வடிவில் இருக்கும். ஏனெனில் ஆரம்பத்தில் கூடுதல் ஊழியர்களை சேர்ப்பதால் செலவு அதிகமான வெளியீட்டினால் பிரிக்கப்படுகிறது. இதனால் AVC குறைகிறது. ஆனால் பின்னர், குறையும் எல்லை உற்பத்தி காரணமாக ஒவ்வொரு ஊழியரின் உற்பத்தி குறைவதால், AVC மீண்டும் அதிகரிக்கத்தொடங்குகிறது.

**(01 புள்ளி)**

- குறைந்து செல்லும் விளைவு விதி காரணமாக, எல்லை உற்பத்தி முதலில் அதிகரித்து பின்னர் குறைகிறது. அதன் விளைவாக, எல்லை செலவு முதலில் குறைந்து பின்னர் அதிகரிக்கிறது (U-வடிவில்). சராசரி மாறும் செலவும் அதேபோல் முதலில் குறைந்து பின்னர் அதிகரிக்கிறது (U-வடிவில்). குறுங்கால எல்லை செலவு மற்றும் சராசரி மாறும் செலவு வளையிகளின் வடிவம், மாறும் உள்ளீட்டின் எல்லை மற்றும் சராசரி உற்பத்திகளால் நேரடியாக நிர்ணயிக்கப்படுகிறது. **(01 புள்ளி)**

**(மொத்த புள்ளிகள் 04)**

**(விளக்கங்களுடன் வரைபடங்கள் பயன்படுத்தப்பட்ட பதில்களுக்கு முழுப் புள்ளிகள் (04) வழங்கப்படலாம்.)**

(iii)

- சாதாரண இலாபம் என்பது ஒரு தொழில்முயற்சியாளர் தனது வளங்களை (உதாரணமாக, அவருடைய சொந்த மூலதனம், நேரம், முயற்சி போன்றவை) வேறு இடங்களில் பயன்படுத்தாமல், தற்போதைய தொழிலில் தொடர்ந்து ஈடுபட வைப்பதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச வருமானமாகும். இது முயற்சியாண்மையின் அமையச் செலவு ஆகும் — அதாவது, இந்த வளங்களை வேறு இடங்களில் பயன்படுத்தியிருந்தால் அவர் சம்பாதித்திருக்கும் வருமானமாகும்.

**(01 புள்ளி)**

- ஒரு நிறுவனத்தின் மொத்தச் செலவில் சாதாரண இலாபத்தைச் சேர்ப்பது நியாயமானது, ஏனெனில்:

- அது முயற்சியாண்மையின் அமையச் செலவைப் பிரதிபலிக்கிறது.
- அது நிறுவனம் தொழிலில் தொடர்வதற்குத் தேவையான அனைத்து செலவுகளையும் ஈடுசெய்வதை உறுதி செய்கிறது.
- இது உண்மையான பொருளாதார இலாபத்தை பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடவும் நீண்ட காலத்தில் நிறுவனங்கள் சந்தையில் நுழையுமா அல்லது வெளியேறுமா என்பதை தீர்மானிக்கவும் உதவுகிறது.
- பொருளாதாரச் செலவுப் பகுப்பாய்வில் மொத்தச் செலவானது வெளிப்படையான மற்றும் மறைமுகமான அனைத்து செலவுகளையும் உள்ளடக்கியதாகும்:
- சாதாரண இலாபம் ஒரு மறைமுகச் செலவாக கருதப்படுகிறது, ஏனெனில் தொழில்முயற்சியாளர் தமது வளங்களை வேறு இடங்களில் பயன்படுத்தியிருந்தால் பெற்றிருக்கும் வருமானத்தை இது குறிக்கிறது. எனவே, இது ஒரு உற்பத்திச் செலவாக கருதப்படுகிறது.

**(ஏதாவது மூன்று காரணங்களுக்கு தலா 01 புள்ளி) (மொத்த புள்ளிகள் 04)**

(iv)

- இலாபம் அல்லது இழப்பு = மொத்த வருமானம் - மொத்தச் செலவு (01 புள்ளி)

மொத்த வருமானம் = சமநிலை வெளியீடு X சமநிலை விலை = 800 x 45 = 36, 000

மொத்தச் செலவு = சமநிலை வெளியீடு X சராசரி நிலையான செலவு = 800 X 35 = 28, 000

இலாபம் அல்லது இழப்பு = மொத்த வருமானம் - மொத்தச் செலவு = 36, 000 - 28, 000 = 8, 000

பொருளாதார இலாபம் = 8, 000 **(01 புள்ளி)**

-மொத்த நிலையான செலவு = சமநிலை வெளியீடு X சராசரி நிலையான செலவு (AFC) **(01 புள்ளி)**

சராசரி நிலையான செலவு (AFC) = சராசரி மொத்தச் செலவு (ATC) - சராசரி மாறும் செலவு (AVC)

சராசரி நிலையான செலவு (AFC) = 35 - 28 = 7

மொத்த நிலையான செலவு = சமநிலை வெளியீடு 800 X சராசரி நிலையான செலவு (7) = 5600

**(01 புள்ளி)**

**(மொத்த புள்ளிகள் 04)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(v)

- தனியுரிமைப் போட்டி என்பது பல நிறுவனங்கள் ஒரே மாதிரியானதாக இருந்தாலும் முழுமையாக ஒரே மாதிரி அல்லாத பொருட்களை விற்பனை செய்யும் சந்தை அமைப்பாகும். ஒவ்வொரு நிறுவனமும் தன் போட்டியாளர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும் வகையில் தரக்குறி, தரம், பொதியிடல் , அமைவிடம், அல்லது வாடிக்கையாளர் சேவை போன்ற அம்சங்களின் மூலம் தனித்துவமான பொருளை வழங்குகிறது.

இந்த வேறுபாட்டின் காரணமாக, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஓரளவு சந்தை ஆதிக்கம் (market power) இருக்கும்.

**(02 புள்ளிகள்)**

- நிறை போட்டிச்சந்தைக்கும் தனியுரிமை சந்தைக்கும் இடையிலான முக்கிய வேறுபாடுகள்

| சிறப்பம்சங்கள் | தனியுரிமைப் போட்டிச் சந்தை | நிறைபோட்டிச் சந்தை | தனியுரிமைச்சந் தை |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | பல | மிகவும் அதிகம் | ஒன்று |
| பொருளின் தன்மை | வேறுபடுத்தப்பட்ட வை | ஓரினமானவை | தனித்துவமானது – நெருங்கிய பதிலீடுகள் இல்லை |
| விலை மீதான கட்டுப்பாடு | சில (விலையைத் தீர்மானிப்பவர்) | ஏதுமில்லை (விலையை ஏற்பவர்) | பூரண கட்டுப்பாடு (விலையைத் தீர்மானிப்பவர்) |
| உள்நுழைவதற்கா ன தடைகள் | சில | ஏதுமில்லை | மிக அதிகம் |
| கேள்வி வளையி | கீழ்நோக்கிய சரிவுடையது | கிடையச்சுக்கு சமாந்தரமான து | கீழ்நோக்கிய சரிவுடையது |
| நீண்டகாலத்தில் இலாபம் | சாதாரண இலாபம் மட்டும் | சாதாரண இலாபம் மட்டும் | அசாதாரண இலாபம் |

(அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள அம்சங்களை பயன்படுத்தி, தனியுரிமைப் போட்டி சந்தையானது எவ்வாறு நிறைபோட்டிச் சந்தை மற்றும் தனியுரிமைச் சந்தை ஆகியவற்றில் இருந்து வேறுபடுகிறது என்பதை விளக்குவதில் விடை கவனம் செலுத்த வேண்டும்.)

**(வேறுபாடுகள் பற்றிய ஏதாவது விளக்கத்திற்கு தலா 01 புள்ளி; மொத்த புள்ளி 03)**

**(மொத்த புள்ளிகள் 05)**

5. (i) கூட்டிய பெறுமதி முறையைப் பயன்படுத்தி தேசிய கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது அரச சேவைகளின் வெளியீட்டின் பெறுமதி மதிப்பிடப்படும் முறையினை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கருதுகோள் ரீதியிலான ஒரு பொருளாதாரத்தின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய சில தரவுகள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| வகை | பெறுமதி (மில்லியன் ரூபா.) |
|---|---|
| வேளாண்மை, காடுவளர்ப்பு மற்றும் கடற்றொழில் துறையின் கூட்டிய பெறுமதி | 1 500 |
| கைத்தொழிற் துறையின் மொத்த கூட்டிய பெறுமதி | 4 500 |
| சேவைத்துறையின் மொத்த கூட்டிய பெறுமதி | 9 500 |
| தனியார் நுகர்வுச் செலவீடு | 12 000 |
| அரசாங்கத்தின் நுகர்வுச் செலவீடு | 1 500 |
| தேறிய உள்நாட்டு மூலதனவாக்கம் | 4 500 |
| பொருள்கள் சேவைகளின் ஏற்றுமதிகள் | 2 000 |
| பொருள்கள் சேவைகளின் இறக்குமதிகள் | 3 000 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த பின்னரான வரி | 1 500 |

மேலுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) அடிப்படை விலைகளில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதி (02 புள்ளிகள்)

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (02 புள்ளிகள்)

(இ) மொத்த உள்நாட்டு சேமிப்புகள் (02 புள்ளிகள்)

(iii) கருதுகோள் ரீதியாக ஒரு பொருளாதாரத்தில் எல்லைச் சேமிப்பு நாட்டம் (MPS) 0.2 எனக் கொள்க. இப்பொருளாதாரத்தின் மாற்றல் பெருக்கியின் பெறுமதியைக் கணிப்பிட்டு அரசாங்கத்தின் மாற்றல் செலவுகள் 100 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்குமாயின், தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) அரசாங்க நடவடிக்கைகளற்ற ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் மொத்த நுகர்வுச் சார்பு $C = 200 + 0.8Y$ எனவும் முதலீடு $I = 80$ ஆகவும் தரப்படுவதாகக் கொள்க. (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தினை கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சமநிலை வருமான மட்டம் தீர்மானிக்கப்படும் விதத்தைக் காட்டும் வரைபடம் ஒன்றை வரைக. (04 புள்ளிகள்)

5. (i)

– கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, பொது நிர்வாகம் போன்ற அரசாங்க சேவைகள் பொருளாதார ரீதியாக குறிப்பிடத்தக்க அளவில் விலைகள் அறவிடப்படாமல் வழங்கப்படுவதால், அவற்றின் உற்பத்தியை விற்பனை அல்லது சந்தை கொடுங்கல்வாங்கல்கள் மூலம் அளவிட முடியாது.

– எனவே, தேசிய கணக்கு முறைமை 2008 (SNA 2008) செலவு அடிப்படையிலான அணுகுமுறையை (அதாவது, பெறுமதி கூட்டிய முறையை) பயன்படுத்த பரிந்துரைக்கிறது. இந்த முறையின் கீழ், உற்பத்தியின் பெறுமதி என்பது உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உள்ளீட்டு செலவுகளின் மொத்தப் பெறுமதிக்குச் சமனாக இருக்கும்

**(02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

தேசிய கணக்கு முறைமையின் 2008 படி, அரசாங்க சேவைகளின் உற்பத்தி பெறுமதி என்பது அவற்றை உற்பத்தி செய்வதில் ஏற்பட்ட செலவுகளின் மொத்தமாக மதிப்பிடப்படுகிறது. அதாவது:

உற்பத்தி பெறுமதி = ஊழியர்களுக்கான நட்டஈடு (கூலிகள், சம்பளம், ஓய்வூதியம்) + இடைநிலை நுகர்வு + நிலையான மூலதன நுகர்வு (பெறுமதித் தேய்வு) + மானியம் கழித்த பொருட்கள் மீதான வரிகள் (ஏதேனும் இருந்தால்).

**(02 புள்ளிகள்)**
**(மொத்தப் புள்ளிகள் 04)**

(ii) (அ) அடிப்டை விலைகளில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதி:

- அடிப்டை விலைகளில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதி = அடிப்படை விலைகளில் வெளியீட்டின் மொத்தக் கூட்டிய பெறுமதி + இடைநிலை நுகர்வு

**(01 புள்ளி)**

-அடிப்படை விலைகளில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதி = விவசாயத் துறை வெளியீட்டின் மொத்தக் கூட்டிய பெறுமதி + கைத்தொழில் துறை வெளியீட்டின் மொத்தக் கூட்டிய பெறுமதி + சேவைகள் துறை வெளியீட்டின் மொத்தக் கூட்டிய பெறுமதி + இடைநிலை நுகர்வு

அடிப்படை விலைகளில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதி = 1500 + 4500 + 9500 + 0 = 15, 500

Rs. 15, 500 மில்லியன் **(01 புள்ளி)**

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP): Y = C + G + I + NX

மொத்த உள்நாட்டு உற்பத்தி = அடிப்படை விலையில் வெளியீட்டின் மொத்தக் கூட்டிய பெறுமதி + மானியம் கழித்த பொருட்கள் மீதான வரிகள்

**(01 புள்ளி)**

- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) = 1500 +4500 + 9500 + 1500 = 17 000

Rs. 17, 000 மில்லியன்

**(01 புள்ளி)**

(இ) மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் ($S_D$):

- மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் ($S_D$): = மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் (GDCF) + தேறிய ஏற்றுமதிகள் (NX) **(01 புள்ளி)**

- மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் ($S_D$) = 4500 + (2000 – 3000)

= 4500 + (- 1000) = 3500; Rs. 3,500 மில்லியன்

GDP – (C+G) = Ds

**(01 புள்ளி)**
(மொத்தப் புள்ளிகள் 06)

(iii)

- மாற்றல் பெருக்கி $= \frac{b}{1-b} = \frac{MPC}{1-MPC}$ **(01 புள்ளி)**

- எல்லை நுகர்வு நாட்டம் (MPC) = 1 – MPS = 1 - 0.2 = 0.8
- மாற்றல் பெருக்கி $= \frac{MPC}{1-MPC} = \frac{0.8}{1-0.8} = \frac{0.8}{0.2} = 4$ **(01 புள்ளி)**

- அரசாங்கத்தின் மாற்றல்களில் ரூ. 100 மில்லியன் அதிகரிப்பினால் ஏற்படும் மொத்த வருமான அதிகரிப்பு:

$\Delta Y$ = மாற்றல் பெருக்கி x $\Delta$ மாற்றல்கள் **(01 புள்ளி)**


$\Delta Y$ = 4 x 100 = Rs. 400 மில்லியன் **(01 புள்ளி)**

**(மொத்தப் புள்ளிகள் 04)**

(iv)

(அ) – Y = C + I
- Y = 200 + 0.8Y + 80 **(01 புள்ளி )**
- Y = 280 + 0.8Y
- Y – 0.8Y = 280; 0.2Y = 280;
- Y $= \frac{280}{0.2}$ = 1400; சமநிலை தேசிய வருமானம்= Rs. 1400 பில்லியன் **(01 புள்ளி )**

(ஆ) சமநிலை வருமானத்தை தீர்மானிப்பதற்கான வரைபடம்



I வளையியிற்கு (01) புள்ளி
C வளையியிற்கு (01) புள்ளி
C + I வளையியிற்கு (01) புள்ளி
Y=E இல் சமநிலைக்கு (01) புள்ளி

**(மொத்தப் புள்ளிகள் 04)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## உப பகுதி - 'ஆ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

6. (i) பணத்தின் உள்நாட்டுப் பெறுமதியை வரைவிலக்கணப்படுத்தி அது பொருளாதாரத்தில் பொது விலை மட்டத்துடன் எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பணக்கணியக் கோட்பாட்டைப் பெறுவதற்கு பரிமாற்றச் சமன்பாட்டைப் பயன்படுத்தும் போது கையாளப்படும் எடுகோள்களை குறிப்பிடுக. நவீன பொருளாதாரங்களில் இவ்வெடுகோள்கள் எந்தளவுக்கு யதார்த்தமானவை என்பதை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) கருதுகோள் ரீதியான ஒரு வணிக வங்கியின் எளிமையான ஐந்தொகை கீழே காட்டப்பட்டுள்ளது.

| பொறுப்புகள் (ரூபா) | | சொத்துகள் (ரூபா) | |
|---|---|---|---|
| கேள்வி வைப்புகள் | 200 000 | தேவைப்படும் ஒதுக்குகள் | 10 000 |
| மூலதனம் | 120 000 | மிகை ஒதுக்குகள் | 4 000 |
| | | கடன்கள் | 180 000 |
| | | பிணையங்கள் | 50 000 |
| | | கட்டடங்கள் | 76 000 |
| மொத்தம் | 320 000 | மொத்தம் | 320 000 |

(அ) தேவைப்படும் ஒதுக்கு வீதத்தினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஒரு வாடிக்கையாளர் வங்கியிலுள்ள தனது நடைமுறைக் கணக்கில் இருந்து 20 000 ரூபாவை மீளப்பெறுவதாகக் கருதுக. இப்பண மீள் பெறுகை காரணமாக வங்கியின் தேவைப்படும் ஒதுக்கின் அளவு எந்தளவினால் மாற்றமடையும்? (02 புள்ளிகள்)

(இ) மேலுள்ள பண மீளப்பெறல் இடம்பெறும் அதே காலப்பகுதியில் வங்கியினால் கடன் எதுவும் மீளப்பெறப்படவில்லை எனக் கருதினால் தேவைப்படும் ஒதுக்கு வீதத்தைப் பேணுவதற்கு வங்கி எடுக்கக்கூடிய மாற்று நடவடிக்கைகள் எவை? (02 புள்ளிகள்)

(iv) 2023 ஆம் ஆண்டின் புதிய மத்திய வங்கிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள படி இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோளினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) மத்திய வங்கிச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பணக் கொள்கைச் சட்டகத்தை விபரிக்குக. அது முன்னர் இருந்த கொள்கைச் சட்டகத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

## ஆ பகுதி

**6. (i)** - பணத்தின் உள்ளகப் பெறுமதி என்பது ஒரு நாட்டினுள் பணத்தின் கொள்வனவுச் சக்தியைக் குறிக்கும். அதாவது ஒரு அலகு பணத்தைக் கொண்டு உள்நாட்டில் கொள்வனவு செய்யத்தக்க பொருள்கள் சேவைகளின் அளவைக்குறிக்கும். உள்நாட்டுப் பொருளாதாரத்தில் மெய்ப் பொருள்களின் சார்பில் பணம் எந்தளவு பெறுமதியைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டும். **(01 புள்ளி)**

- பொதுவிலை மட்டத்திற்கும் பணத்தின் உள்ளகப் பெறுமதிக்கும் இடையில் ஒரு எதிர்க்கணியத் தொடர்பு காணப்படுகிறது.

**(01 புள்ளி )**

- பொது விலை மட்டம் அதிகரிக்கும் போது (பணவீக்கம்) அதன் உள்ளகப் பெறுமதி அல்லது பணத்தின் கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடையும். காரணம் ஒவ்வொரு நாணய அலகும் முன்பைவிட குறைந்தளவு பொருள்கள் சேவைகளைக் கொள்வனவு செய்ய முடிவதனாலாகும். விலைமட்டம் வீழ்ச்சியடையும் போது (பணச்சுருக்கம் ) பணத்தின் உள்ளகப் பெறுமதி அதிகரிக்கும். ஏனெனில் ஒரே அளவு பணம் அதிகளவு கொள்வனவை மேற்கொள்ள முடிவதனாலாகும். **(01 புள்ளி)**

**(மொத்தப் புள்ளிகள் 03)**

**(ii)** - பரிமாற்றச் சமன்பாட்டை பணக்கணியக் கோட்பாடாக மாற்றுவதற்கு பொருளியலாளர்கள் பின்வரும் எடுகோள்களைக் கையாள்கின்றனர்:

MV=PT
MV=PY

- புழக்கச் சுற்றோட்ட வேகம் (V) குறுங்காலத்தில் நிலையானது. **(01 புள்ளி)**
- குறுங்காலத்தில் மெய்வெளியீடானது அதன் நிறைதொழில் மட்டத்தில் (Y) நிலையாகக் காணப்படும். **(01 புள்ளி)**

- நவீன பொருளாதாரங்களில் இவ்வெடுகோள்கள் அதிகளவு எளிமைப்படுத்தப்பட்டதாகவும் பெரும்பாலும் பொருத்தமற்றதாகவும் கருதப்படுகின்றன:

- நிலையான V: வட்டிவீதங்கள், டிஜிட்டல் செலுத்தல்கள், நிதித்துறையில் ஏற்படும் புத்தாக்கங்கள், நம்பகத்தன்மை என்பவற்றிற்கேற்ப புழக்கச் சுற்றோட்ட வேகம் தளம்பல்களுக்கு உட்படும். **(01 புள்ளி )**

- நிலையான Y/ நிறைதொழில் மட்டம்: பொருளாதாரங்கள் பெரும்பாலும் நிறைதொழில் மட்ட வெளியீட்டை விடக் குறைந்த இயலளவிலேயே தொழிற்படும். விசேடமாகக் குறுங்காலத்தில் வெளியீட்டை கேள்வியில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப மாற்றியமைக்க முடியும். **(01 புள்ளி )**

**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(iii)** தேவைப்படும் ஒதுக்கில் ஏற்பட்ட மாற்றம் = $10,000 - \{(200,000 - 20,000) \times 5\%\}$

(அ) தேவைப்படும் ஒதுக்கு வீதம் = தேவைப்படும் ஒதுக்குகள் ÷ கேள்வி வைப்புகள் **(01 புள்ளி)**

$= 10,000 \div 200,000 = 0.05 = 5\%$ **(01 புள்ளி)**

(ஆ) 20,000 ரூபா காசு மீளப்பெறப்பட்ட பின் தேவைப்படும் ஒதுக்குகள்:

- தேவைப்படும் ஒதுக்கில் ஏற்பட்ட மாற்றம் = $10,000 - \{(200,000 - 20,000) \times 5\%\}$ **(01 புள்ளி)**
- தேவைப்படும் ஒதுக்கில் ஏற்பட்ட மாற்றம் = $10,000 - 9,000$ = Rs. 1,000 **(01 புள்ளி)**

(இ) - பணமீளப் பெறல் வங்கியின் மிகை ஒதுக்குகளை விட அதிகமாயின் வங்கி பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை (அழைப்புக்கடன்கள்) ஊடாக நிதி மிகை நிலையினைக் கொண்டுள்ள மற்றொரு வணிக வங்கியிடமிருந்து கடன் பெறலாம் அல்லது
- மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறலாம் (கழிவீட்டு சாளரம் / இறுதிக் கடன் வழங்குநர்)
- திரவச் சொத்துகளை (securities) விற்பனை செய்வதன் மூலம் ஒதுக்குத் தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி)**
**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(iv)** - உள்நாட்டில் விலையுறுதிபாட்டை அடைதலும் பேணிச் செல்வதும் .

(02 புள்ளிகள்)

**(v)** - மத்திய வங்கிச் சட்டத்தின் படி நாணயக் கொள்கைச் சபை நெகிழும் பணவீக்க இலக்கிடல் சட்டகத்திற்கு (FIT) ஏற்ப பணக்கொள்கையை வகுக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

**(01 புள்ளி)**

- (FIT) சட்டகமானது நிதி அமைச்சுக்கும் மத்தியவங்கிக்கும் இடையிலான பணக்கொள்கைச் சட்டக உடன்படிக்கையினால் (MPFA) நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் பணவீக்கத்தைப் பேணிச்செல்வதை இலக்காகக் கொண்டுள்ளது. தற்போதைய (MPFA) மத்தியவங்கி 5 சதவீத காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை பேணிச்செல்வதை இலக்காக நிர்ணயித்துள்ளது.

**(01 புள்ளி)**

- பணவீக்க இலக்கை அடைவதற்கு மத்தியவங்கி ஓரிரவு கொள்கை வீதத்தைப் (OPR) பயன்படுத்துகிறது. இது குறுங்கால வட்டிவீதத்தை விரும்பத்தக்க பாதையில் இட்டுச்செல்ல வழிகாட்டுகிறது. அதுவே மத்தியவங்கியின் பணக்கொள்கை பற்றிய சைகை வழங்கும் பிரதான பணக்கொள்கைக் கருவியாகும்.

- OPR அறிமுகப்படுத்தப்பட முன்னர் தயார்நிலை வசதிகள் அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிவீதம் (SLFR), ஆகியன கொள்கை வட்டிவீதங்களாகச் செயற்பட்டன .

**(02 புள்ளிகள்)**

- முன்னர் நாணய இலக்கிடல் மற்றும் பணவீக்க இலக்கிடல் ஆகிய இரு பண்புகளையும் உள்ளடக்கிய ஒரு மேம்படுத்தப்பட்ட பணக்கொள்கைச் சட்டகத்தினுள் பணக்கொள்கையை நடைமுறைப்படுத்தியது. இம்முறைமையின் கீழ் மத்தியவங்கியானது பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் நிலைப்படுத்த முயற்சித்தது. நாணய இலக்கிடல் சட்டகத்தின் கீழ் பணநிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் விலையுறுதிப்பாட்டை பாதிக்கும் முதன்மைக் காரணிகளாகக் கருதப்பட்டது.

**(01 புள்ளி )**
**( மொத்தப் புள்ளிகள் 05)**

7. (i) உற்பத்தியின் எதிர்கணிய வெளிவாரிகளை வரைவிலக்கணப்படுத்தி அது சந்தைத் தோல்விக்கு இட்டுச் செல்லும் விதத்தை ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) அரசாங்கத்தின் மீண்டெழும் செலவுகள் என்பதனால் கருதப்படுவதென்ன? இலங்கை அரசாங்கத்தின் பாதீட்டில் மீண்டெழும் செலவுகளின் பிரதான பிரிவுகள் மூன்றினைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் இலாபமீட்டும் பிரதான அரச தொழில் முயற்சிகள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iv) 2022 ஆண்டின் பொருளாதார நெருக்கடியின் பின்னர் இலங்கை அறிமுகப்படுத்திய பிரதான வரிச் சீர்த்திருத்தங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) அரச தனியார் பங்குடமை (PPPs) என்பதை வரைவிலக்கணப்படுத்தி இலங்கை அரசின் பாதீட்டுப் பற்றாக்குறையை குறைப்பதற்கும் அரசிறை உறுதிப்பாட்டை அடைவதற்கும் அரச தனியார் பங்குடைமைகள் பங்களிப்புச் செய்யும் விதத்தினை விளக்குக. (05 புள்ளிகள்)


**7. (i)** - ஒரு எதிர்க்கணிய உற்பத்தி வெளிவாரியானது ஒரு பொருளின் அல்லது சேவையின் உற்பத்தியின் போது அவ்வுற்பத்தித் தீர்மானத்துடனோ அல்லது நுகர்வுத் தீர்மானத்துடனோ தொடர்பு படாத மூன்றாம் தரப்பினர் மீது வெளிவாரிச் செலவுகளை ஏற்படுத்தும் போது உருவாகும்.

**(01 புள்ளி)**

- ஒரு எதிர்க்கணிய உற்பத்தி வெளிவாரி **சந்தைத் தோல்விக்கு** இட்டுச் செல்லும் ஏனெனில் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற்கொள்ளாமல் சந்தையானது சமூகரீதியில் உத்தமமான வெளியீட்டு மட்டத்தை விடக் கூடுதலாக உற்பத்தி செய்யும்.

- சந்தையில் நிறுவனங்கள் எந்தளவை உற்பத்தி செய்வதென்று தீர்மானிக்கும் போது அவற்றின் **தனியார் எல்லைச் செலவுகளை (MPC)** மாத்திரமே கருத்திற் கொள்ளும். எவ்வாறாயினும் வெளிவாரிச் செலவுகளின் காரணமாக (உதாரணம் மாசுபாடு மற்றும் சுற்றாடல் சீரழிவு) **சமூக எல்லைச் செலவுகள் (MSC)** தனியார் எல்லைச் செலவுகளை **(MPC)** விட உயர்வாகக் காணப்படும்.

**(01 புள்ளி)**




**( வரைபடத்திற்கு 01 புள்ளி)**

- தாராள சந்தையில் சமநிலையானது **கேள்வி** (D)யானது **MPC**யை இடைவெட்டும் புள்ளியில் ஏற்படும். இது $Q_e$ வெளியீட்டில் மிகையுற்பத்திக்கு இட்டுச் செல்லும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

சமூகரீதியில் உத்தமமான வெளியீடாவது Dயானது MSCயை இடைவெட்டும் புள்ளியில் உள்ள Qe வெளியீடாகும். எனவே இங்கு (Qo – Qe) அளவு மிகையுற்பத்தி ஏற்பட்டு ஒரு நலன் இழப்பை (மீளமுடியா இழப்பு) ஏற்படுத்தியுள்ளது. இது MSC மற்றும் MPC வளையிகளுக்கிடையில் நிறந்தீட்டப்பட்ட முக்கோணப்பகுதியால் காட்டப்பட்டுள்ளது.

**(01 புள்ளி)**
**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(ii)** - அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினங்கள் என்பவை **அரசாங்கத்தின் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நடைமுறையில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் செலவினங்களாகும்.** இச்செலவுகள் ஒவ்வொரு வருடமும் ஏற்படுவதுடன் இவை புதிய சொத்துக்கள் எதனையும் உருவாக்குவதில்லை ஆயினும் பொதுச் சேவைகளை வழங்குவதற்காகவும் அரசாங்கத்தை இயக்கிச் செல்லவும் அத்தியாவசியமானவையாகும்

**(01 புள்ளி)**

- இலங்கையின் வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைக்கணக்கில் வழக்கமாக உள்ளடக்கப்படும் பிரதான கூறுகளாவன:
  - பொதுப்படுகடன் மீதான வட்டிச் செலுத்தல்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக்கடன் மீதானவை)
  - வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் (அஸ்வெசும ஓய்வூதியங்கள் உரமானியம் போன்றவை)
  - அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்களும் கூலிகளும்

CE → G, Ir, Ig

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி; மொத்தம் 03 புள்ளிகள்)**
**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(iii)**

- இலங்கைத் துறைமுக அதிகார சபை (SLPA)
- ஊழியர் நம்பிக்கை நிதிய சபை
- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- தேசிய சேமிப்பு வங்கி
- பிராந்திய அபிவிருத்தி வங்கி

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி ஏதாவது மூன்று நிறுவனங்களுக்கு 03 புள்ளிகள்)**
**(மொத்தப் புள்ளிகள் 03)**

**(iv)**

(1)- அவசரகால வரிப்பொதி (2022 நடுப்பகுதி)
- **VAT வரி அதிகரிப்பு ஆரம்பத்தில்** 8% இருந்து 12%, வரையும் பின்னர் 15–18%. வரையும் உயர்த்தப்பட்டது.
- **தொலைத் தொடர்பு வரி** 11.25% இருந்து 15%. ஆக உயர்த்தப்பட்டது
- வருடாந்தம் ரூபா LKR 120 மில்லியனை விட உயர்வான புரள்வினைக் கொண்ட நிறுவனங்கள் மீது (அண்ணளவாக 2.5%) **சமூக பாதுகாப்புப் பங்களிப்பு வரி** அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2020/21. ஆண்டில் வரிக்குட்பட்ட வருமானம் ரூபா LKR 2 பில்லியனைவிட கூடுதலாக அறிக்கையிடப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது **Surcharge tax 25%** மேலதிக வரி

(2)- வருமான வரி முறைமையின் மறுசீரமைப்பு ( 2022 இறுதியில்)

- வரி விலக்கிற்குட்பட்ட வருமான எல்லையை ரூபா LKR 3 மில்லியனிலிருந்து சுமார் 1.2 மில்லியனாகக் குறைத்ததன் மூலம் தனிநபர் வருமானவரி PIT கொடுப்பனவு (அலவன்ஸ்) வீழ்ச்சியடைந்தது.
- எல்லை PIT வரி வீதங்கள் எல்லா மட்டங்களிலும் அதிகரித்தன; **உதாரணமாக புதிய வீதங்களின் வீச்சு 6% இருந்து 36% வரையாக இருந்தது.**
- பங்கிலாபங்கள் வட்டிவருவாய்கள் மற்றும் சேவைகள் மீதான பிடித்து வைத்தல் வரிகள் **கட்டாயமாக்கப்பட்டன.**
- **கம்பனி வருமான வரியும் சலுகைகளின் நீக்கமும்: கம்பனி வருமான வரிகள் 24% இருந்து 30%, ஆக உயர்த்தப் பட்டதுடன் (14%) ஆகக் காணப்பட்ட சலுகை வீதங்கள் நீக்கப்பட்டன.**

**துரித VAT வரிச் சீராக்கங்களும் விலக்களிப்புகளை நீக்குதலும் (2023–24)**

- **VAT** நியமவரிவீதம் சுமார் 15%–18%, வரையில் உயர்த்தப்பட்டு முக்கியமான அத்தியாவசியப் பொருள்களான பெற்றோல் சமையல் வாயு மற்றும் மருந்துப்பொருள்கள் வரி வலையமைப்பினுள் கொண்டுவரப்பட்டன.
- **கூட்டுரிமை வீடுகள் சேவைகள் மற்றும் சில இறக்குமதிகள் மீது வழங்கப்பட்டிருந்த விலக்களிப்புகள் நீக்கப்பட்டன** VAT வரிக்குட்பதிவு எல்லையும் அதிகளவு வரிசெலுத்துவோரை முறைமைக்குள் கொண்டுவருவதற்காக கீழ்நோக்கி நகர்த்தப்பட்டது.

**IMF சட்டகத்தின் கீழ் மேலும் வரிச் சீர்திருத்தங்கள் (2025)**

- வதியோரால் வழங்கப்படும் **டிஜிட்டல் சேவைகள் மீது 18% VAT வரி** (2025 ஏப்ரல் தொடக்கம்)
- இலகுபடுத்தப்பட்ட VAT (SVAT) வரிமுறைமைக்குப் பதிலாக ஒரு **VAT வரி மீள் செலுத்தல் முறையும் இலத்திரனியல் முறையில்** வரிப்படிவங்களை சமர்ப்பிப்பதை **கட்டாயமாக்கும் முறையும்.**
- வெளிநாட்டு சேவை வழங்குநர்களுக்கு **(15%) CIT சலுகை.**
- சூதாட்டம், பந்தயம் மதுபானங்கள் மற்றும் புகையிலை என்பவற்றின் மீது **உயர்ந்த வீதத்திலான வரிகள் (45%)**

வரிநிர்வாகம் மற்றும் வரிஇணக்க மேம்பாடுகள்

- வரிநிர்வாகத்தை தரமுயர்த்தல்: இலத்திரனில் முறையில் தாக்கல் செய்தல் வலுவான பெரிய வரிசெலுத்தல் அலகு வரி அடையாள இலக்கங்களை (TIN) வழங்கல், கடுமையான அமுலாக்கம்.

**(ஒன்றிற்கு 01 புள்ளி ஏதாவது 04 வரிச் சீர்திருத்தங்களுக்கு)**
**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(v)** - அரச தனியார் பங்குடமை என்பது பொதுவாக அரச துறையினால் வழங்கப்படும் சேவைகளை அல்லது செயற்திட்டங்களை நிதிப்படுத்தல் கட்டியெழுப்பல் மற்றும் இயக்கிச் செல்லல் நோக்கங்களுக்காக அரசாங்கத்திற்கும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் கூட்டு ஏற்பாடுகளாகும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

PPP என்பது தனியார் துறை பங்குபற்றுநர்கள் அரசதுறையுடன் சேர்ந்து ஒரு பொதுத்திட்டத்தை அல்லது சேவையை வழங்குதல் மற்றும் இடர் அபாயங்களையும் இலாபங்களையும் பகிர்ந்து கொள்ளும் ஒரு உடன்படிக்கையாகும்.

**(02 புள்ளிகள்)**

**- PPP கள் இலங்கையின் பாதீட்டுக் குறைநிலையைக் குறைக்கவும் அரசிறை நிலையினைப்பலப்படுத்தவும் பங்களிக்க முடியும்:**

- **தனியார் மூலதனத்தை திரட்டுதல்** – PPPகள் அரசாங்கத்தின் நேரடிக்கடன் பெறுவதற்கான தேவையையும் உட்கட்டுமானங்கள் மீதான செலவீடுகளையும் குறைக்கும்.
- **குறைந்த இறைச்சுமை** – செயற்திட்ட செலவுகளை நிதியிடல், நிர்மாணித்தல், அத்துடன் சிலவேளைகளில் செயற்பாடுகளையும் தனியார் துறையுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதால் அரசாங்க பாதீட்டின் மீதான அழுத்தங்கள் குறைவடையும்.
- **வினைத்திறன் மேம்பாடும் செலவுச்-செயல்திறனும்** – தனியார் துறையின் பங்குபற்றல் சிறந்த செயற்திட்ட முகாமைத்துவத்திற்கும் பொது நிதிகளின் வீண்விரயங்கள் குறைவடைவதற்கும் இட்டுச் செல்லும்.
- **வருவாய் உருவாக்கம்** – கட்டணம் செலுத்தும் நெடுஞ்சாலைகள் எரிசக்திவளச் செயற்திட்டங்கள் போன்ற PPP செயற்திட்டங்கள. அரசாங்கத்திற்கு புதிய வருவாய் ஊற்றுக்களை உருவாக்குவதால் அரசிறை உறுதிப்பாட்டிற்கு உதவலாம்.
- **இடர் அபாயங்களைப் பகிர்ந்து கொள்ளல்** – நிர்மாணம், நிதியியல், செயற்பாட்டு இடர்கள் பகுதியளவில் தனியார்துறைக்கு நகர்த்தப்படுவதால் எதிர்பாராத அரசிறை அதிர்ச்சிகளைத் தவிர்க்கலாம்.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம் ஏதாவது மூன்று நன்மைகளுக்கு)**
**(மொத்தப் புள்ளிகள் 05)**

8. (i) ஒப்பீட்டு நன்மை மற்றும் போட்டி நன்மை என்பவற்றிற்கிடையிலான அடிப்படை வேறுபாட்டை உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) இரட்டைப்பதிவு தத்துவத்தின் படி இலங்கையின் சென்மதி நிலுவைக் கணக்கில் பின்வரும் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களின் வரவுப் பதிவுகளும் செலவுப் பதிவுகளும் எவ்வாறு மேற்கொள்ளப்படும்?

(அ) இலங்கையின் ஒரு வதிவாளர் வெளிநாட்டிலிருந்து 500 டொலர் பண அனுப்பலைப் பெறுகிறார்.

(ஆ) இலங்கையில் உள்ள விவசாய இரசாயன உற்பத்தி நிறுவனம் உள்ளூரில் ஒரு குறிப்பிட்ட விவசாய இரசாயனத்தை உற்பத்தி செய்யும் பொருட்டு 50 மில்லியன் டொலர்கள் பெறுமதியான காப்புரிமையைக் (Patent) கொள்வனவு செய்தது.

(இ) இலங்கை அரசாங்கம் நியுயோர்க் நிதிச்சந்தையில் அபிவிருத்தி முறிகளை விற்பனை செய்வதன் மூலம் 200 மில்லியன் டொலர்களை கடனாகப் பெறுகிறது. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் நாணயமாற்று வீதத்தை நிர்ணயிக்கும் பிரதான கேள்வி நிரம்பல் காரணிகள் எவை? (04 புள்ளிகள்)

(iv) வெளிநாட்டு நேரடி முதலீடு என்பதனால் கருதப்படுவதென்ன? நாட்டுக்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலை உள்ளீர்ப்பதற்கு இலங்கை கைக்கொள்ளக்கூடிய உபாயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) இலங்கையின் ஏற்றுமதிகள் மீதான ஐக்கிய அமெரிக்காவின் தீர்வை மாற்றங்கள் இலங்கையின் சென்மதி நிலுவையையும் அந்நியச் செலாவணி உழைப்புகளையும் எவ்வாறு பாதிக்கும் என்பதை பரிசீலனை செய்க. (05 புள்ளிகள்)

**8. (i)** - ஒப்பீட்டு நன்மை மற்றும் போட்டி நன்மை என்பவற்றிற்கிடையிலான அடிப்படை வேறுபாடு அவற்றின் பகுப்பாய்வு முறையின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. ஒப்பீட்டு நன்மையானது வினைத்திறன் மற்றும் அமையச்செலவில் கவனம் செலுத்தும் ஒரு பொருளியல் கோட்பாடாகவுள்ள அதேவேளை போட்டி நன்மையானது சந்தைச் செயலாற்றம் மற்றும் இலாபத்தன்மையில் கவனம் செலுத்தும் வியாபாரத் தந்திரோபாயமாகவுள்ளது.

- ஒப்பீட்டு நன்மை என்பது ஒரு நாடு அல்லது ஒரு நிறுவனம் மற்றொரு நாடு அல்லது நிறுவனத்தைவிட குறைந்த அமையச்செலவில் ஒரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்யும் இயலுமையைக் குறிப்பிடுகிறது. ஒருவர் எல்லாப் பொருள்களையும் வினைத்திறனாக உற்பத்தி செய்யும் போதிலும் கூட வர்த்தகமானது அதில் ஈடுபடும் சகலதரப்பினருக்கும் நன்மையளிக்கிறது என்பதை விளக்குகிறது. போட்டி நன்மை என்பது சந்தையில் ஒரு நாடு அல்லது நிறுவனம் அதன் போட்டியாளர்களை விடச் சிறப்பாகச் செயற்படக் காரணமாகின்ற பொருள்களின் மீயுயர் தரம் வர்த்தக நாமத்தின் பிரபலத்தன்மை சிறந்த தொழில் நுட்பம், புத்தாக்கம் அல்லது உற்பத்திச் செலவில் மேலாதிக்க நிலை போன்ற பொருள்களின் தனித்துவமான சிறப்பம்சங்கள் அல்லது தனித்துவமான சக்தி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

**(02 புள்ளி)**

உதாரணமாக:

- ஒப்பீட்டு நன்மை: இலங்கையும் இந்தியாவும் தேயிலை மற்றும் ஆடைகள் ஆகிய இரு பொருள்களையும் உற்பத்தி செய்வதாகக் கருதுக. இலங்கை மேலதிகமாக ஒரு அலகு தேயிலையை உற்பத்தி செய்ய இந்தியாவை விடக் குறைந்தளவு ஆடைவெளியீட்டை தியாகம் செய்ய நேர்கிறதாயின் இலங்கை தேயிலை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது. இந்தியா மேலதிகமாக ஓரலகு ஆடையை உற்பத்தி செய்ய குறைந்தளவு தேயிலையைத் தியாகம் செய்யுமாயின் இந்தியா ஆடை



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது. இரு நாடுகளும் சிறக்குமியல்பு மற்றும் வர்த்தகத்தின் மூலம் நன்மையடையலாம்.

**(01 புள்ளி)**

- போட்டி நன்மை: அப்பிள் நிறுவனமானது உறுதியான வர்த்தக நாமம் புத்தாக்கம் மற்றும் சூழல் அமைப்பின் ஒருங்கிணைவு என்பவற்றின் காரணமாக திறன் பேசி (smartphone) சந்தையில் ஒரு போட்டி நன்மையைக் கொண்டுள்ளது.

**(01 புள்ளி)**

**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(ii) (அ)**

- **வரவு (+):** நடைமுறைக்கணக்கு → இரண்டாந்தர வருமானம் = $500
- **செலவு (–):** நிதிக் கணக்கு → ஏனைய முதலீடுகள் - நாணயங்களும் வைப்புக்களும் = $500

**(01 புள்ளி)**

(ஆ)

- **செலவு (–):** மூலதனக்கணக்கு → உற்பத்தி செய்யப்படாத, நிதியல்லா சொத்தைக் கையகப்படுத்தல் = $50 மில்லியன்
- **வரவு (+):** நிதிக்கணக்கு → ஏனைய முதலீடுகள் → நாணயங்களும் வைப்புகளும் = $50 மில்லியன் **(01 புள்ளி)**

(இ)

- **வரவு (+):** நிதிக்கணக்கு → ஏனைய முதலீடுகள் →கடன்கள் → பொது அரசாங்கம் = $200 மில்லியன்
- **செலவு (–):** நிதிக்கணக்கு → ஏனைய முதலீடுகள் → நாணயங்களும் வைப்புகளும் = $200 மில்லியன்

**(01 புள்ளி)**

**(மொத்தப் புள்ளிகள் 03)**

**(iii)**

- **சென்மதி நிலுவையின் (BOP) நிலை: நடைமுறைக்கணக்கு (ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும்); மூலதனக்கணக்கும் நிதிக்கணக்கும் ( வெளிநாட்டு நேரடி முதலீட்டின் FDI,உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும் பட்டியல் முதலீடுகள் அல்லது கடன்கள்)**
  - வட்டிவீத வேறுபாடுகள்
  - பணவீக்க வேறுபாடுகள்
  - பணக்கொள்கை மற்றும் இறைக்கொள்கை மாற்றங்கள்
  - உத்தேச நோக்கங்களும் சந்தை எதிர்பார்க்கைகளும்
  - வர்த்தக மாற்று விகிதம்
  - வெளியகக் காரணிகள்

**(ஒன்றிற்கு 01 புள்ளி ஏதேனும் நான்கு காரணிகளுக்கு)**

**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(iv)** - வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது ஒருநாட்டில் இருந்து ஒரு தனிநபர், கம்பனி, அரசாங்கம் என்பவற்றினால் இன்னொரு நாட்டினுள் காணப்படும் ஒரு வியாபாரம் அல்லது சொத்தின் மீது நீண்டகால ஈடுபாட்டை உருவாக்குவதுடன் அவ்வியாபாரத்திலிருந்து இலாபத்தை ஈட்ட அதன் மீது குறிப்பிடத்தக்களவு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்படும் முதலீடாகும்

**(01 புள்ளி)**

- வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர இலங்கை பின்வரும் தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்தலாம்:

  - பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டையும் அரசியல் உறுதிப்பாட்டையும் உறுதி செய்தல்
  - சட்டக் கட்டமைப்பையும் நிர்வாகக் கட்டமைப்பையும் வலுப்படுத்தல்
  - உட்கட்டுமானங்களையும் போக்குவரத்து வழங்கல் கட்டமைப்புகளையும் மேம்படுத்தல்
  - போட்டித்தன்மை வாய்ந்த ஒரு நிலையான வரி புறச்சூழலை ஏற்படுத்தல்
  - திறன்மிகு மனிதவளங்களை விருத்தி செய்தல்
  - விசேட ஊக்குவிப்பு வலயங்களை (SEZs) விரிவாக்கி ஊக்குவித்தல்.
  - அரச–தனியார் பங்குடமையை (PPPs) ஊக்குவித்தல்
  - பிராந்திய ஒருங்கிணைப்பையும் வர்த்தகத்தையும் வலுப்படுத்தல்
  - எழுச்சி பெற்றுவரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்தல்: IT/BPO, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, சுற்றுலா, விவசாய பெறுமதிச் சங்கிலிகள், மற்றும் உயர்பெறுமதி வாய்ந்த உற்பத்திக் கைத்தொழில் ஆகியவற்றில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை FDI ஊக்குவித்தல். ESG (Enviornment, Social and Governance performance) சட்டகங்கள் மற்றும் கொள்கை ஊக்குவிப்புகள் ஊடாக பச்சை மற்றும் பேண்தகு முதலீடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

**(ஒன்றிற்கு 01 புள்ளி ஏதேனும் மூன்று உபாயங்களுக்கு)**

(1+3 = 4 புள்ளி) **(மொத்தப்புள்ளிகள் 04)**

**(v)** - ஐக்கிய அமெரிக்காவானது குறிப்பாக, தைத்த ஆடைகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருள்கள், கடலுணவுப் பொருள்கள் போன்ற இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பிரதான ஏற்றுமதி முடிவிடங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. ஆதலால் அமெரிக்காவின் தீர்வைக் கொள்கைகளில் ஏற்படும் எந்த ஒரு மாற்றமும் இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றத்தையும் அந்நியச் செலாவணி உட்பாய்ச்சலையும் நேரடியாகப் பாதிக்கும்.

- அமெரிக்கா இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான குறிப்பாக தைக்கப்பட்ட ஆடைகளுக்கான பிரதான ஏற்றுமதி முடிவிடங்களில் ஒன்றாக இருப்பதனால், (ஆடைஏற்றுமதி வருவாய்களில் அண்ணளவாக 40% அங்கிருந்து பெறப்படுகிறது), இத்தீர்வைகள் ஏற்றுமதி வருவாய்களை குறைத்து அந்நியச் செலாவணி உட்பாய்ச்சலை சுருங்கச் செய்யும் **(02 புள்ளிகள்)**

- சென்மதி நிலுவை விளைவுகள்:

  - உயர் தீர்வைகள் (30%) அமெரிக்கச் சந்தையில் இலங்கைப்பொருள்களை விலை கூடியனவாக மாற்றும் இது அமெரிக்காவுடன் சாதகமான வர்த்தக ஒப்பந்தங்களைக் கொண்டுள்ள ஆசிய வழங்குநர்களுடன் ஒப்பிடுமிடத்துக் இலங்கையின் விலைப்போட்டித் தன்மையைக் குறைவடையச் செய்யும். உயர்வீதத் தீர்வைகள் அமெரிக்காவில் இலங்கைப் பொருள்களுக்கான கேள்வியைக் குறைப்பதனால் ஏற்றுமதியளவு குறைந்து ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் வீழ்ச்சியடையும்.
  - வர்த்தக நிலுவை சீர்கெடும்:
    குறைந்த ஏற்றுமதி வருமானங்கள் நடைமுறைக்கணக்கின் முக்கிய கூறாகிய வர்த்தக நிலுவையை மோசமாக்கும்.
  - நடைமுறைக் கணக்குக் குறைநிலை விரிவாகும்:
    குறைவான ஏற்றுமதி வருவாய்கள் நிலையாகவுள்ள அல்லது அதிகரித்துச் செல்லும் இறக்குமதிகளுடன் இணையும் போது நடைமுறைக்கணக்குக் குறைநிலையை அதிகரிக்கும். **(02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

அந்நியச் செலாவணி உழைப்புகள் மீதான விளைவுகள்:

- வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களில் வீழ்ச்சி ஏற்படும்:
ஏற்றுமதிகள் சிறிதளவு டொலர்களையே உழைக்கும் இது அந்நியச் செலாவணி உள்வருகையின் வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லும்.
- நாணயமாற்றுவீதம் மீதான அழுத்தங்கள்:
டொலர் உட்பாய்ச்சல் குறைவதனால் இலங்கை ரூபா தேய்வடையலாம் இது இறக்குமதிகளை விலைகூடியதாக மாற்றுவதால் பணவீக்கத்திற்கு எண்ணெய் ஊற்றுவதாக அமையலாம் **(01 புள்ளி)**

**(மொத்தப் புள்ளிகள் 05)**

9. (i) பேண்தகு அபிவிருத்தியின் மூன்று தூண்களைப் பெயரிட்டு அவற்றிற்கு இடையிலான இடைத் தொடர்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியினால் மாத்திரம் பிரதிபலிக்கப்படமுடியாத அபிவிருத்தி எண்ணக்கருவின் பல்பரிமாணங்களை மனித அபிவிருத்திச் சுட்டெண் எவ்வாறு உள்வாங்குகின்றது என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) (அ) தொழிற்படையின் பங்குபற்றல் வீதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றல் வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு பங்களிக்கும் பிரதான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) (அ) முழுவறுமையை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) தேசிய மற்றும் சர்வதேச நியமங்களின் படி இலங்கையில் முழுவறுமை எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

**9. (i)**

- **பொருளாதாரப் பேண்தகு தன்மை:** வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தும் அதேவேளை பொருளாதார வளர்ச்சி நிலையானதாகவும் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் அனைவருக்கும் வாய்ப்புகளை உருவாக்குவதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.
- **சமூக பேண்தகு தன்மை:** சமூகத்தின் எல்லா அங்கத்தவர்களுக்கும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் வளங்களையும் வாய்ப்புகளையும் சமமாகப் பெற்றுக்கொள்வது சமூக நீதியை ஊக்குவித்தல் என்பவற்றை உறுதி செய்கிறது.
- **சுற்றாடல் பேண்தகு தன்மை:** இயற்கை வளங்கள் பொறுப்புடன் பயன்படுத்தப்படல், சூழலியல் முறைமைகள் பாதுகாக்கப்படல், சுற்றாடல் சீரழிவு இழிவுபடுத்தப்படல் என்பவற்றை உறுதி செய்தல்.

**(03 புள்ளிகள்)**

இம்மூன்று தூண்களும் பரஸ்பரம் **ஒன்றையொன்று வலுப்படுத்துவனவாகும்:**

- **பொருளாதாரமும் சுற்றாடலும்:** பொருளாதார வளர்ச்சியானது இயற்கை வளங்களில் தங்கியுள்ளது; பேண்தகு நடைமுறைகள் வளங்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்தும். எவ்வாறாயினும், அவற்றை மிகையாக அகழ்ந்தெடுப்பதானது சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கும், அதன் விளைவாக பொருளாதாரத்தின் விளைதிறன் வீழ்ச்சியடையும்.

- **சமூகமும் பொருளாதாரமும்:** ஒரு ஆரோக்கியமான, கல்வி கற்ற சமூகம் பொருளாதாரத்தின் விளைதிறனை அதிகரிக்கும், அதேவேளை அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதாரக் கொள்கைகள் வறுமையையும் வருமான சமமின்மையையும் குறைக்கும்.
- **சமூகமும் சுற்றாடலும்:** சுற்றாடல் சீரழிவு மனித ஆரோக்கியத்திற்கும் வாழ்வாதாரத்திற்கும் தீங்குவிளைவிக்கும், குறிப்பாக இதனை வறியவர்கள் மத்தியில் காணலாம். சூழலியல் முறைமைகளைப் பாதுகாப்பது சமூக நலனையும் உணவுப்பாதுகாப்பையும் பாதுகாக்கும்.

**(01 புள்ளி)**

**(மொத்தப்புள்ளிகள் 04)**

**(ii)** - அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சிக்கு அப்பாற்சென்று சமூக, அரசியல், சுற்றாடல், மற்றும் மனிதக் காரணிகளயும் உள்ளடக்கிய பலபரிமாண எண்ணக்கருவாகும்.

**(01 புள்ளி)**

- மொத்த உள்நாட்டு உற்பத்தி GDP வளர்ச்சியானது ஒருநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சேவைகளின் மொத்தப் பெறுமதியையும் அதில் ஏற்படும் மாற்றத்தையும் அளவிடுகிறது. அது மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பது பற்றியோ அவர்களது ஆரோக்கியம் கல்வி அல்லது வாழ்க்கைத்தரம் பற்றியோ எதையும் குறிப்பிடுவதில்லை. ஒரு நாடு உயர்ந்த GDP யைக் கொண்டிருந்த போதிலும் அதன் மக்களில் பெரும்பாலானோர் குறைந்த வாழ்க்கைத் தரத்தில் சிரமப்படலாம். **(01 புள்ளி)**

- மனித அபிவிருத்திச் சுட்டெண் (HDI), மனித நலனின் பல்பரிமாணங்களை உள்ளடக்கும் ஒரு கூட்டுச் சுட்டெண்ணாகும். அது அபிவிருத்தி குறித்து GDP வளர்ச்சியை விட பரந்த ஒரு புரிதலை வழங்குகிறது. HDIஆனது பொருளாதாரத்தின் வெளியீட்டை மட்டும் கருத்திற்கொள்ளும் GDP இற்கு அப்பாற் சென்று அபிவிருத்தியின் பல்பரிமாணங்களையும் உள்ளடக்குவதன் மூலம் உருவாக்கப்பட்டது. அது மூன்று முக்கிய பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

- **சுகாதாரம் (பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்க்கை)** நீண்டகாலம் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கான மக்களின் இயலுமையை பிரதிபலிக்கிறது.
- **கல்வி (பாடசாலை செல்லும் ஆண்டுகளின் சராசரியும் எதிர்பார்க்கப்படும் பாடசாலை செல்லும் ஆண்டுகளும்)** அறிவையும் திறன்களையும் உள்ளடக்குகிறது.
- **வாழ்க்கைத் தரம் (கொள்வனவு சக்தி சமப்படுத்தப்பட்ட தலைக்குரிய மொத்த தேசியவருமானம் GNI per Capita)** வளங்களின் மீது கொண்டுள்ள அதிகாரத்தை அளவிடுகிறது.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 05)**

**(iii) (அ)**

- தொழிற்படையின் பங்குபற்றல் வீதம் என்பது 15 வயதும் அதற்கு மேற்பட்ட வயது சனத்தொகையில் பொருளாதார ரீதியில் செயற்படும் சனத் தொகையின் சதவீதமாகும்.
- தொழில் புரியும் வயது சனத்தொகையில் (15 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களும்) தொழில் புரியும் மற்றும் தொழிலற்ற சனத்தொகையின் (அல்லது தொழிற்படையின்) சதவீதமாகும்

**(ஏதாவது ஒரு சரியான வரைவிலக்கணத்திற்கு 02 புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(ஆ)

- சமூக கலாசார பாரம்பரியங்கள்
- குடும்ப பராமரிப்புப் பொறுப்புகள்
- தொழிற்சந்தைப் பாகுபாடுகள்
- தொழில் வாய்ப்புகளும் தொழில் நிலைமைகளும்
- கல்விக்கும்–தொழில் வாய்ப்புகளுக்கும் இடையிலான பொருத்தப்பாடின்மை
- குடிப்பெயர்வும் முறைசாராதுறை தொழில்களும்
- மகப்பேறு தொடர்புபட்ட போதியளவு கொள்கைகள் இல்லாமை
- பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட உதவிகளும்
- நிதிவசதிகளை பெறுவதில் கட்டுப்பாடுகளும் பெண்களின் பொருளாதார ஈடுபாட்டை மேலும் மட்டுப்படுத்துகின்றன.

**(ஒரு காரணத்திற்கு 01 புள்ளி ஏதாவது மூன்று காரணங்களுக்கு)**

**(மொத்தப் புள்ளிகள் 05)**

**(iv) (அ)** உணவு, சுத்தமான நீர், ஆடைகள், வாழிடம், சுகாதாரப் பராமரிப்பு, மற்றும் கல்வி போன்ற உயிர் வாழ்க்கைக்கும் ஒரு குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்தைப் பேணிச் செல்வதற்கும் அத்தியாவசியமான வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான குறைந்த மட்ட வருமானத்தை அல்லது வளங்களை ஒரு தனிநபரோ அல்லது ஒரு குடும்பமோ பெறமுடியாத நிலை முழுவறுமையாகும். **(02 புள்ளிகள்)**

(ஆ) - இலங்கையில் தேசிய வறுமை அளவீடானது **தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் (DCS)** உருவாக்கப்பட்ட **தேசியவறுமைக் கோட்டின் (NPL),** அடிப்படையில் மேற்கொள்ளப் படுகிறது. இவ்வறுமைக்கோடானது தனிநபர் ஒருவருக்கு மாதம் ஒன்றில் தனது அடிப்படை வாழ்க்கைத் தரத்தைப் பேணிச் செல்ல அவசியமான உணவு மற்றும் உணவல்லாத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவைப்படும் குறைந்தபட்ச செலவீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எவரேனும் ஒருவர் இக்கோட்டைவிடக் குறைவான நுகர்வுச் செலவீட்டைக் கொண்டிருப்பாராயின் வறியவராகக் கருதப்படுவார்.

**(01 புள்ளி)**

- **சர்வதேச நியமங்கள்: உலக வங்கியின் சர்வதேச வறுமைக் கோடுகள்:** சர்வதேச ஒப்பீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு உலக வங்கியானது ஒரு நாளுக்குரிய நிலையான டொலர் வருமானத்தை (கொள்வனவுச் சக்தி சமன் செய்யப் பட்ட -**PPP).**) அடிப்படையாக் கொண்ட வறுமைக்கோட்டைக் கையாள்கிறது. இலங்கை உள்ளடங்கலான குறைந்தபட்ச நடுத்தரவருமானம் பெறும் நாடுகளைப் பொறுத்தமட்டில் இவ்வறுமைக்கோடானது நாளொன்றிற்கு **US $4.20 (PPP)** ஆகவுள்ளது.
**2025 ஜுலை மாத்திற்கு முன்பு இப்பெறுமதி** நாளொன்றிற்கு **$ 3.65** ஆகக் காணப்பட்டது.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 05)**

10. (i) 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு காரணமாகிய பிரதான கொள்கைத் தோல்விகள் எவையென விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தி அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இலங்கைப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு சார் சீர்திருத்தங்கள் உடனடியாகத் தேவைப்படும் ஐந்து பிரதான துறைகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) உயர்ந்த பெறுமதி சேர்க்கையை பெற்றுத்தரும் தயாரிப்பு மற்றும் சேவைகள் துறையின் அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு இலங்கை பின்பற்றவேண்டிய முக்கிய கைத்தொழில் கொள்கை நடவடிக்கைகள் யாவை? (05 புள்ளிகள்)

(iv) சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதி செயற்திட்டத்தின் கீழ் இலங்கையின் பேரினப் பொருளாதார செயலாற்றும் எவ்வாறு முன்னேற்றமடைந்துள்ளது? இதில் தொடர்ந்தும் எதிர்நோக்கப்படும் பிரதான சவால்கள் எவை என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

**10. (i)**

- **நிலைபேற்றுத் தன்மையற்ற இறைக் கொள்கைகள்:**
  - மிகையான பாதீட்டுக் குறைநிலைகள்; உயர் மட்டத்திலான பொதுப்படுகடன்கள்; பாரியளவு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் திரட்சி; 2019 இல் அரச செலவீடுகளில் குறைப்புகள் ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்ட வரிக்குறைப்புகள் அரச வருவாயைக் குறைத்து குறைநிலையினை மோசமாக்கியது.
- **பலவீனமான படுகடன் முகாமைத்துவம்:**
  - அதிகளவிலான வெளிநாட்டுக் கடன் பெறல்: அரசாங்கம் சலுகை ரீதியிலான பல்பக்கக் கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக பாரியளவில் சர்வதேச மூலதனச் சந்தைகளில் இருந்து கடன் (இறைமைப் கடன் முறிகள் ஊடாக).
  - குறுகிய கால முதிர்வுடைய உயர் வட்டிவீதக் கடன்கள்: வெளிநாட்டுக் கடன்களில் மிகப்பெரிய ஒரு பகுதி குறுங்கால உயர்வட்டி கொண்ட கடன் கருவிகளாக இருந்ததால் உயர்ந்த கடன் சுழற்சி இடர் அபாயங்களுக்கு இட்டுச் சென்றது.
  - கடன் மூலம் நிதிப்படுத்தப்பட்ட உட்கட்டுமானச் செயற்திட்டங்கள்: பேரளவு உட்கட்டுமானச் செயற்திட்டங்கள் பல (உ.ம். அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம்) பொருளாதார ரீதியில் பொருத்தமானவையன்று அத்துடன் அவை போதியளவு அந்நியச் செலாவணி உழைப்பினை உருவாக்கவில்லை.
- **பணக்கொள்கை முகாமைத்துவச் சீரின்மை:**
  - அதிகளவு பணம் அச்சிடப்பட்டமை: பற்றாக்குறைகளை நிதியீட்டம் செய்ய, மத்தியவங்கியானது பணநிரம்பலை அதிகரித்தது, இது உயர் பணவீக்கத்தை ஏற்படுத்தியது.
  - குறைந்த வட்டி வீதக் கொள்கை : செயற்கையாக நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வட்டிவீதங்கள் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குப்பதிலாக கடன் பெறலையும் மிகை நுகர்வையும் ஊக்குவித்தன.
  - நாணய மாற்றுவீத இறுக்கத்தன்மை: இலங்கை ரூபாவானது மிக நீண்டதொரு காலப்பகுதியில் மிகைமதிப்புடையதாகப் பாதுகாக்கப்பட்டது; இதனால் வெளிநாட்டு ஒதுக்குகள் குறைவடைந்து நாட்டின் போட்டித்தன்மை வீழ்ச்சியடைந்தது.
  - 



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- **நாணயமாற்றுக் கொள்கைத் தோல்விகள்:**
    - நாணய மாற்றுவீத சீராக்கங்களின் காலதாமதம்: நாணய மாற்றுவீதத்தை நிலைப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகள் உரிய காலத்தில் நாணய மாற்றுவீதத் தேய்வை அனுமதிப்பதற்குப் பதிலாக ஒதுக்குகளை விரைவாக வழிந்தோடச் செய்தன.
    - இறக்குமதிக் மட்டுப்படுத்தல்களும் செலாவணிக் கட்டுபாடுகளும்: வெளிநாட்டு ஒதுக்குகளைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட (வாகனங்கள் மீது, உரம், போன்றன மீது) மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் சந்தைப் பிறழ்வுகளையும் உற்பத்தி வீழ்ச்சியையும் ஏற்படுத்தியது.
    - ஒதுக்குகளின் வீழ்ச்சி: வெளிநாட்டு ஒதுக்குகள் சுமார் USD 7.6 பில்லியனில் (2019) இருந்து 2022 நடுப்பகுதியில் USD 50 மில்லியனை விடக் குறைந்த மட்டத்திற்கு (பயன்படுத்தக் கூடிய ஒதுக்குகள்) வீழ்ச்சியடைந்தன.

- விவசாயக் கொள்கைத் தோல்வி:
    - இயற்கை விவசாயத்தை நோக்கிய திடீர் திரும்பல்: **2021, அரசாங்கம் இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் மீது நாடுமுழுவதுமாக தடையை விதித்தது. இது விவசாயத்துறையின் உற்பத்தித் திறனின் சடுதியான வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. தேயிலை மற்றும் அரிசியின் விளைச்சல் குறைந்தது நாடு உணவை இறக்குதி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது — இது சென்மதி நிலுவை நெருக்கடியை மோசமாக்கியது.**

- IMFஐ அணுக காலதாமதம் ஏற்பட்டமை:
    - **கடன் நெருக்கடி ஏற்படுவதற்கான ஆதாரங்கள் மலையளவு குவிந்த போதிலும், அரசாங்கமானது IMF உடனான பேச்சுவார்த்தைகளை ஒதுக்குகள் ஏறத்தாழ முழுவதுமாகத் தீர்ந்து போகும் வரை தாமதப்படுத்தியது.**
        - **முன்கூட்டியே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தால் விரைவாக கடன் மீள கட்டமைப்பைச் செய்து முதலீட்டாளர் நம்பிக்கையை மீள உருவாக்க வசதியாக இருந்திருக்கும்.**

- பலவீனமான நிறுவன ஆட்சிமுறைமையும் ஊழலும்:
    - அரசிறை வெளிப்படைத்தன்மைக் குறைபாடு: குறைந்த அறிக்கையிடலும் பலவீனமான பொறுப்புக் கூறல் பொறிமுறையும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை குறைத்தது.
    - முக்கிய அரசநிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டமை: மத்திய வங்கியும் திறைசேரியும் அரசியல் செல்வாக்கிற்குட்பட்டிருந்தன, **இது நாணய மற்றும் இறைக்கொள்கைகளின் நம்பகத்தன்மையை குறைத்தது.**
    - **ஊழலும் வாரந்தேடலும்:** அரசாங்கத்தின் செயற்திட்டங்களில் நிலவிய வளஒதுக்கீட்டுப் பிழைகளும் ஊழல்களும் நிதி ஒழுக்கத்தையும் விளைத்திறனையும் சிதைத்தது.

**(ஒன்றிற்கு 01 புள்ளி எவையேனும் ஐந்து கொள்கைத் தோல்விகளுக்கு)**
**(மொத்தப் புள்ளிகள் 05)**

**(ii)** - பொருளாதாரத்தில் நீண்டகால உற்பத்தி திறனையும், விளைத்திறனையும், போட்டித் தன்மையையும் மேம்படுத்த கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் அவசியமாகும். பின்வரும் துறைகள் முக்கியமானவையாகும்:

- அரசிறைத் துறை (பொது நிதியியல் முகாமைத்துவம்): நீடித்த பாதீட்டுக் குறைநிலைள், விளைத்திறனற்ற வரிமுறைமை, மற்றும் மிகையான பொதுப்படுகடன் திரட்சி.
- பொதுத்துறையும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளும் (SOEs): பல SOEs நட்டத்தில் இயங்கி பாதீட்டின் மீது கடுமையான சுமையை ஏற்படுத்தி உள்ளன.
- விவசாயத்துறை: குறைந்த உற்பத்தித் திறன், துண்டாடப்பட்ட நிலவுடைமை, மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மை (உ.ம்., உரம் மீதான தடை).

- கைத்தொழில் மற்றும் உற்பத்தித் துறை: வரையறுக்கப்பட்ட பன்முகப்படுத்தல் மற்றும் ஆடைகள் மற்றும் புடைவைகள் போன்ற குறைந்த பெறுமதிச் சேர்க்கை கொண்ட கைத்தொழில்களில் வெகுவாகத் தங்கியிருத்தல்.
- வெளிநாட்டு வர்த்தகமும் ஏற்றுமதித் துறையும்: ஒடுக்கமான ஏற்றுமதி அடித்தளம் நெடுநாட்பட்ட வர்த்தகக் கணக்கு குறைநிலைகள்
- நிதித்துறை: அரசாங்கத்தின் கடனுக்கு அதிகளவில் வெளிப்பட்டமை, வரையறுக்கப்பட்ட நிதி உள்அடங்கல்(inclusion), மற்றும் பலவீனமான ஒழுங்கிறுத்தல் மேற்பார்வை.
- வலுசக்தித் துறை: இறக்குமதி செய்யப்பட்ட படிம எரிபொருளில் பெருமளவு தங்கியிருத்தல் மற்றும் வலுசக்தியுடன் தொடர்புடைய SOEs களின் செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்.
- கல்வியும் தொழிற் சந்தையும்: திறன்களின் பொருத்தப்பாடின்மை, தொழிற்படையில் பெண்களின் குறைந்தளவு பங்குகொள்ளல், மற்றும் காலத்திற்கு பொருத்தமற்ற பாடத்திட்டங்கள்.
- ஆட்சிமுறை மற்றும் நிறுவனத்துறை: பலவீனமான ஆட்சி முறை, ஊழல், மற்றும் கொள்கை முரண்பாடுகள்.
- சுற்றுலா மற்றும் பணிகள் துறை: போதியளவு உட்கட்டுமானங்கள் இல்லாமை, நிச்சயத்தன்மையற்ற கொள்கைகள், மற்றும் வெளியக அதிர்ச்சிகள் காரணமாக குறைப்பயன்பாட்டுக்கு உட்பட்டுள்ளது.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி; உடனடியாக சீர்திருத்தங்கள் தேவைப்படும் ஏதாவது ஐந்து துறைகளுக்கு)** **(மொத்தப் புள்ளிகள் 05)**

**(iii)** - இலங்கையின் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புகள் அதன் பொருளாதாரத்தை குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட, தொழிற்சாலைகளில் இயக்கப்படும் கைத்தொழில்களில் இருந்து புத்தாக்கத்தை முதன்மையாகக் கொண்ட, உயர் பெறுமதிச் சேர்க்கையுடைய உற்பத்தித் தொழிலாகவும் சேவைகளாகவும் மாற்றியமைப்பதிலேயே தங்கியுள்ளது. இலங்கை பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்:

1. கைத்தொழில் பன்முகப்படுத்தலையும் தரம் உயர்த்தலையும் ஊக்குவித்தல்:
   - பெறுமதிச் சங்கிலியில் மேல்நோக்கிய அசைவை ஊக்குவித்தல்.
   - உபாயரீதியில் முக்கியம் வாய்ந்த துறைகளை இலக்கிடல்: (உ.ம்., உணவு தயாரிப்பு, மருத்துவக் கருவிகள், மீள்புதுப்பிக்கத் தக்க வலுசக்திக் கருவிகள்).
   - கைத்தொழில் மையங்களையும் சிறப்பு பொருளாதார வலயங்களையும் தாபித்தல் (SEZs):

- ஆய்வு, அபிவிருத்தி, மற்றும் புத்தாக்கம் (R&D) ஆகியவற்றை வலுப்படுத்தல்
  - R&D செலவீடுகளை அதிகரித்தல்: தனியார் மற்றும் அரசாங்கத்தின் R&D மீதான முதலீடுகளை (தற்போது GDP யின் 0.2% விடக் குறைவாகும்.) குறைந்த பட்சம் GDP யின் 1% ஆக அதிகரிக்க வேண்டும்.
  - புத்தாக்கத்திற்கான சலுகைகள்: தொழில் நுட்ப புத்தாக்கங்கள், உற்பத்தி வடிவமைப்பு, மற்றும் செயன்முறை தரமேம்பாடு என்பவற்றில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு மானியங்களையும் வரிமீள் அளிப்புகளையும் வழங்குதல்.
  - பல்கலைக்கழக– கைத்தொழிற்துறை இடைத் தொடர்புகளை ஊக்குவித்தல்.

- மனித மூலதனம் மற்றும் திறன் விருத்தியை மேம்படுத்தல்
  - கல்வி மற்றும் பயிற்சித்திட்டங்களின் சீர்திருத்தம்.
  - STEM கல்வியை ஊக்குவித்தல்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

    - கைத்தொழில் முறைமாற்றத்திற்கும் தானியங்கி மயப்படுத்தலுக்கும் வேலையாட்களைத் தயார் செய்தல்.

- கைத்தொழில் துறைக்கான மூலதனத்தை பெறுவதை மேம்படுத்தல்:
    - கைத்தொழிற் துறைக்கான கடன்களை வசதிப்படுத்தல்: அபிவிருத்தி வங்கிகள் மற்றும் இலகு கடன் முறைமைகள் ஊடாக SMEs களுக்கும் ஏற்றுமதி-நோக்கிய உற்பத்தியாளர்களுக்கும் கடன்வசதிகளை வலுப்படுத்தல்.
    - ~~Encourage~~ தொழில் முயற்சி முதலீடுகளையும் (venture capital) மற்றும் பங்கு முதலீடுகளையும் ஊக்குவித்தல்.
    - அரச–தனியார் பங்குடைமை (PPPs)

- டிஜிட்டல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்புகளை விருத்தி செய்தல்
    - டிஜிட்டல் உட்கட்டமைப்புகள்: e-வணிகம் மற்றும் ICT- அடிப்படையிலான சேவைக் கைத்தொழில்களை ஆதரிப்பதற்காக Broadband இணைப்புகளை விரிவாக்கல், தரவு மையங்களை உருவாக்கல், அத்துடன் டிஜிட்டல் தொடர்பு உட்கடடுமாணங்களை விஸ்தரித்தல்.
    - கைத்தொழில் உட்கட்டுமானம்: உற்பத்திச் செலவைக் குறைத்து போட்டித்தன்மையை மேம்படுத்த போக்குவரத்து, வலுசக்தி, மற்றும் அவசியமான உட்கட்டுமான வசதிகளை தரமுயர்த்தல்.
    - பசுமைக் கைத்தொழில் வலயங்களை உருவாக்கல்.

- ஏற்றுமதியை நோக்கியதாகவும் உலக பெறுமதிச் சங்கிலியில் ஒருங்கிணைவதையும் வலுப்படுத்தல்
    - வர்த்தக வசதிப்படுத்தல்: ஏற்றுமதி நடைமுறைகளை எளிமைப்படுத்தல், சுங்கத்தில் நிலவும் காலதாமதங்களைக் குறைத்தல், அத்துடன் சர்வதேச தரநியமங்களுடன் ஒத்திசைவதன் மூலம் ஏற்றுமதியை நோக்கிய முதலீட்டாளர்களைக் கவரலாம்.
    - வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) கவர்தல்
    - பிராந்திய ஒருங்கிணைப்பு:
      பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளில் பங்குபற்றுவதை தீவிரமாக்கல் உ.ம்., RCEP, BIMSTEC)

- சேவைகள் துறையை விருத்தி செய்வதை ஆதரித்தல்
    - ICT மற்றும் அறிவை-அடிப்படையாகக் கொண்ட சேவைகள்: மென்பொருள் உருவாக்கம், fintech, business process outsourcing (BPO), மற்றும் AI-அடிப்படையிலான கைத்தொழில்களை ஊக்குவித்தல்
    - பொருள் விநியோகம் மற்றும் போக்குவரத்து சேவைகள்.
    - நிதி மற்றும் தொழில்சார் சேவைகள்
- கொள்கை ஒருங்கிணைப்பையும் நிறுவனரீதியான சீர்திருத்தங்களும்
    - கைத்தொழில் கொள்கை சட்டகம்: தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் ஒழுங்கமையும் வகையில் ஒத்திசைவான நீண்டகால கைத்தொழில் தந்திரோபாயத்தை உருவாக்குதல்.
    - நிறுவனரீதியான ஒருங்கிணைப்பு: கொள்கைச் சிதறல்களை தவிர்க்கும் பொருட்டு அமைச்சுகளுக்கு (கைத்தொழில், வர்த்தகம், நிதி, கல்வி) இடையிலான ஒருங்கணைப்பை வலுப்படுத்தல்.
    - கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி எவையேனும் ஐந்து பிரதான உபாயங்களுக்கு)**

**(மொத்தப் புள்ளிகள் 05)**

**(iv)**

- வளர்ச்சியின் மீள் திரும்பல்:

  - 2022 இல் ஏற்பட்ட மிகத்தீவிரமான பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னர் இலங்கைப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்களவு மீள்திரும்பலைக் காட்டியுள்ளது. உத்தியோகபூர்வத் தரவுகளின் படி 2024 இல் வளர்ச்சியானது was strong (சுமார் ~5 %) உறுதியானதாக இருந்ததுடன் நேர்க்கணிய பிரதேசத்தில் மீள்பிரவேசிப்பதை சுட்டிக்காட்டியது.
    - 2025 இன் ஆரம்பத்தரவுகள் (Q1) கூட ஆண்டுக்கு-ஆண்டு ~4.8 % வளர்ச்சியைக் காட்டியது. Q2 4.9% வளர்ச்சியைப் பதிவு செய்தது.
- கட்டமைப்புப் பலவீனங்களும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியும்
  - பொருளாதாரம் மீள்திரும்பலைக்காட்டிய போதிலும் பொருளாதார மீட்சியானது முழுமையாக வாழ்க்கைத் தரமேம்பாட்டிற்கு வழிவகுக்கவில்லை: வறுமையானது உயர்மட்டத்தில் நிலவுகிறது (உ.ம். 2024 இல் சனத்தொகையில் 24.5 % சதவீதமானோர் குறித்ததொரு வறுமைக்கோட்டிற்கு கீழாக இருந்தனர்) அத்துடன் தொழில் வாய்ப்பு விகிதங்களும் மெய்க்கூலிகளும் நெருக்கடிக்கு முந்திய மட்டங்களுக்குக் குறைவாகவே உள்ளன.
- கடன் பேண்தகு தன்மையும் அரசிறைசார் இடர்களும்
  - கடன் மறுசீரமைப்பு பெரும்பாலும் முடிவடைந்துள்ள போதிலும், அரசதுறை அல்லது அரசதுறையால் பிணையளிக்கப்பட்டுள்ள கடன்கள் GDP மிக உயர்ந்த சதவீதத்தில் காணப்படுகின்றன
  - இறை இடைவெளி இறுக்கமாதாகக் காணப்படுகிறது: ஆரம்ப நிலுவையின் மிகைநிலையினைப் இலக்கினைப் பேணல், செலவுகளைக் கட்டுப்படுத்தல் (குறிப்பாக எதிர்பாராத பொறுப்புகள் contingent liabilities, அரசதுறை தொழில் முயற்சிகள் போன்றன) ஆகியன முக்கியமானதாகும். IMF "கொள்கைப் பிழைகளுக்கு இடமில்லை" என அழுத்திக் கூறுகிறது.
- வெளியக இடர் அபாயங்களும் பாதிப்புறும் தன்மையும்
  - வெளிநாட்டுச் சூழல் நிச்சயமற்றதாகக் காணப்படுகிறது: வர்த்தகக் கொள்கை அதிர்ச்சிகள், உலகப் பொருள் விலைகள், மற்றும் உலக அரசியல் அழுத்தங்கள் இலங்கையின் பொருளாதார மீட்சியில் கீழ்நோக்கிய இடர்களாக உள்ளன.
  - ஒதுக்குகளின் நிலை மேம்பட்டுள்ள போதிலும், அவை சாத்தியமான இறக்குமதித் தேவைகளுடனும் வெளியக அதிர்ச்சிகளுடனும் ஒப்பீடுகையில் மிதமான மட்டத்திலேயே காணப்படுகின்றன.
- கொள்கைச் சோர்வு நிலையும் கொள்கை நடைமுறைப்படுத்தல் இயலளவும்
  - சீர்திருத்தங்களைத் தொடர்ந்து மேற்கொள்வது சவாலானதாகும்: நிறுவனங்களின் இயலளவு, ஆளுகை, மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றிய பலவீனங்கள் தொடர்கின்றன. "கொள்கைச் சோர்வு நிலைக்கு" எதிரான பாதுகாப்பை ஏற்படுத்துவதன் தேவையை IMF சுட்டிக்காட்டியுள்ளது
- சமூக மற்றும் பங்கீட்டு விளைவுகள்
  - பேரினப் பொருளாதாரக் குறிகாட்டிகள் மேம்படுகின்ற போதிலும், குடும்பங்கள் பல உணவுப்பாதுகாப்பின்மை, உயர் விலைகள் (குறிப்பாக ஆரம்ப கட்டத்தில்), மற்றும் தொழிற் சந்தைப் பிரச்சினைகளை தற்போதும் எதிர்கொள்கின்றன. மெய்க் கூலிகள் 2019 இல் நிலவிய மட்டங்களை விடக் குறைவாகவே உள்ளன.

PAST PAPERS WIKI



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- பணவீக்கமும் விலையுறுதிப்பாடும்:

    ○ நெருக்கடியின் போது மிக உயர்ந்த மட்டத்தை அடைந்த பணவீக்கம், குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது.

- அரசிறைச் செயலாற்றுமும் கடன் மறுசீரமைப்பும்:

    - அரச வருவாய் திரட்டல் மேம்பட்டுள்ளது. GDP யின் சதவீதமாக அரச வருவாய் 2022இல் ~8.2 % இருந்து 2024இல் ~13.5 % ஆக அதிகரித்துள்ளது.
    - ஆரம்ப நிலுவையின் மிகைநிலையினை அடையும் இலக்கு எய்தப்பட்டுள்ளது: உ.ம்., 2024 இல் ஆரம்ப நிலுவையின் மிகையடனது GDP யின் சதவீதமாக ~2.2 % இனை அடைந்து இலக்கினை மிஞ்சியதாக காணப்பட்டது.
    - வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்புகளின் பிரதான முன்னேற்றம்: யூரோ பிணையங்களில் பெரும்பாலானவை பரிமாற்றப்பட்டுள்ளன, இருபக்க ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- எஞ்சியுள்ள சவால்கள்:

கட்டமைப்புப் பலவீனமும் அனைத்தும் உள்ளடங்கிய வளர்ச்சியும்

- பொருளாதாரம் மீள்திரும்பலைக்காட்டிய போதிலும் பொருளாதார மீட்சியானது முழுமையாக வாழ்க்கைத் தரமேம்பாட்டிற்கு வழிவகுக்கவில்லை: வறுமையானது உயர்மட்டத்தில் நிலவுகிறது (உ.ம். 2024 இல் சனத்தொகையில் 24.5 % சதவீதமானோர் குறித்ததொரு வறுமைக்கோட்டிற்கு கீழாக இருந்தனர்) அத்துடன் தொழில் வாய்ப்பு விகிதங்களும் மெய்க்கூலிகளும் நெருக்கடிக்கு முந்திய மட்டங்களுக்குக் குறைவாகவே உள்ளன.
- சேவைத்துறையும் கைத்தொழிலும் மீட்சிநிலையை காட்டினாலும், பல நிரம்பல் பக்க வரையறைகளும் குறைந்த உற்பத்தித் திறன் பற்றிய பிரச்சினைகளும் தொடர்ந்து காணப்படுகின்றன.

- கடன் நிலைபேற்றுத்தன்மையும் அரசிறை இடர் அபாயங்களும்

- கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பெரும்பாலும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள போதிலும், GDP யின் சதவீதமா அரச கடன்களும் அரசாங்கத்தால் பிணையளிக்கப்பட்ட கடன்களும் (PPG) மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளன (உ.ம்., GDP யின் 100 % இற்கும் அதிகமாக காணப்படுகிறது).

- இறை இடைவெளி இறுக்கமாதாகக் காணப்படுகிறது. ஆரம்ப நிலுவையின் மிகைநிலையினைப் இலக்கினைப் பேணல், செலவுகளைக் கட்டுப்படுத்தல் (குறிப்பாக எதிர்பாராத பொறுப்புகள் contingent liabilities, அரசதுறை தொழில் முயற்சிகள் போன்றன) ஆகியன முக்கியமானதாகும். IMF "கொள்கைப் பிழைகளுக்கு இடமில்லை" என அழுத்திக் கூறுகிறது - வெளியக இடர் அபாயங்களும் பாதிப்புறு தன்மையும்.

- வெளிநாட்டுச் சூழல் நிச்சயமற்றதாகக் காணப்படுகிறது: வர்த்தகக் கொள்கை அதிர்ச்சிகள், உலகப் பொருள் விலைகள், மற்றும் உலக அரசியல் அழுத்தங்கள் இலங்கையின் பொருளாதார மீட்சியில் கீழ்நோக்கிய இடர்களாக உள்ளன.



Past Papers Wiki

- ஒதுக்குகளின் நிலை மேம்பட்டுள்ள போதிலும், அவை சாத்தியமான இறக்குமதித் தேவைகளுடனும் வெளியக அதிர்ச்சிகளுடனும் ஒப்பிடுகையில் மிதமான மட்டத்திலேயே காணப்படுகின்றன.

- சீர்திருத்தங்களின் சோர்வு நிலையும் நடைமுறைப்படுத்தும் இயலுமையும்

- சீர்திருத்தங்களைத் தொடர்ந்து மேற்கொள்வது சவாலானதாகும்: நிறுவனங்களின் இயலளவு, ஆளுகை, மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றிய பலவீனங்கள் தொடர்கின்றன. "கொள்கைச் சோர்வு நிலைக்கு" எதிரான பாதுகாப்பை ஏற்படுத்துவதன் தேவையை IMF சுட்டிக்காட்டியுள்ளது.

- சில கட்டமைப்பு சார் குறிகாட்டிகள் "காலதாமதத்துடன் அடையப் பட்டுள்ளன" அல்லது இன்னும் அடையப்படாதுள்ளன.

- சமூக மற்றும் பங்கீட்டு விளைவுகள்

- பேரினப் பொருளாதாரக் குறிகாட்டிகள் மேம்படுகின்ற போதிலும், குடும்பங்கள் பல உணவுப்பாதுகாப்பின்மை, உயர் விலைகள் (குறிப்பாக ஆரம்ப கட்டத்தில்), மற்றும் தொழிற் சந்தைப் பிரச்சினைகளை தற்போதும் எதிர்கொள்கின்றன. மெய்க் கூலிகள் 2019 இல் நிலவிய மட்டங்களை விடக் குறைவாகவே உள்ளன. ,

- வளர்ச்சியானது அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் சமூகத்தின் பரந்துபட்ட சகல பிரிவினருக்கும் நன்மையளிப்பதாக இருப்பதை உறுதிப்படுத்துவது சவாலானதாகும்.

(ஏதேனும் 5 விடயங்கள்
05 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න